# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 21 இதழ் - 10 அக்டோபர் 2008

## 11-வது வேதாகம கருத்தரங்கம் - காங்கயம்





(கருத்தரங்கில் பாடல் குழுவினர்)



வேதாகம கருத்தரங்கில் பங்கு பெற்றோரில் ஒரு பகுதி

# BIBLE MEDITATION

**TV PROGRAM**




## ஆசானின் அறிவுரையில் ...

1. ஆசிரியர் உரை ........ 1
2. மாபெரும் பொக்கிஷம் ........ 9
3. பெண்கள் பகுதி ........ 13
4. வாலிபர் பகுதி ........ 17
5. சிறுவர் பகுதி ........ 21
6. இவர்கள் மரித்தார்கள் ஆனால் இன்னும் பேசிக் கொண்டிருக்கிறார்கள் ... 23
7. வேதாகமத்தில் ஈராக் நாடு ........ 26
8. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 28

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 21 OCTOBER - 2008 Issue - 9**


ஆசிரியர் உரை

## "இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை"

நமதாண்டவராகிய இயேசுக்கிறிஸ்து மாபெரும் போதகர் என்ற சிறப்புப் பெயரை சர்ச்சைக்கிடமின்றி சான்றோரால் பெற்றவர். அவருடைய பேச்சில் எளிமையும், வலிமையும் மாத்திரமல்லாமல் கனிவும், கருத்தாழமும், சொல்லாட்சியும் மிகுந்து காணப்பட்டது. இது நடைமுறைக்கு ஒவ்வாதது என்றும் புரிந்து கொள்வதற்குச் சிரமம் என்றும் சொல்லப்படும் பகுதிகள் இல்லையென்று வேதத்தை ஆழ்ந்து படிக்கும் ஒருவனால் ஆணித்தரமாகச் சொல்ல முடியும். ஆனால் அவர் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவம் மாத்திரம், வேதத்தை மேலெழுந்த வாரியாகப் படிக்கும் அநேகரின் புருவத்தை உயர்த்தி விடுகிறது. அதற்குக் காரணம் நிச்சயமாக நமதாண்டவரல்ல. இருப்பினும், அவர் தனது தீர்ப்பில் தவறிழைத்து விட்டதைப் போன்ற ஒரு மாயத்தோற்றம் கண்ணுக்கு தெரியும் என்பதை பெரும்பாலும் நாம் மறுப்பதற் கில்லை.

இச்சம்பவம் இயேசுவின் பூமிக்குண்டான வாழ்வின் கடைசி ஆறு நாட்களில் நடந்த ஒன்று. பஸ்கா பண்டிகை சமீபத்திருந்த ஒரு சந்தர்ப்பம் அது அவரின் பூலோக வாழ்க்கையில் இது ஒரு முக்கியமான கட்டம். ஜீவனுக்குண்டான வழியைப் போதிக்கும்படி பூமிக்கு வந்த இயேசு தனது கடைசி கட்ட போதனையில் தீவிரம் காட்டியிருந்த நேரம். எரிகோவிலிருந்து எருசலேமுக்கு வரும் வழியில் எருசலேம் பட்டணத் துக்கு வெளியே இரண்டு மைல் தொலைவில் உள்ள ஒலிவமலையின் அடிவாரத்திலுள்ள பெத்பகே,

பெத்தானியா கிராமத்திற்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது வழக்கம் போல மார்த்தாள், மரியாள், லாசரு இவர்களுக்குச் சொந்தமான வீட்டில் தங்கினார். மரியாள் விலையேறப் பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள் (யோவா 12:2).

அத்தருணத்தில் தான், அடுத்த நாளில் இயேசு ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத கழுதைக்குட்டியின் மீதேறி வெற்றி வீரராக எருசலேமுக்குப் பவனி வந்தார். அப்போது தங்களின் பரவசத்தை வெளிப்படுத்த விரும்பிய பெருங்கூட்டம், வஸ்திரங்களை வழியிலே விரித்தது. அத்தோடு திருப்தியடையாமல் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பவும் செய்தது. ஓசன்னா என்ற முழக்கம் விண்ணை முட்டியது. வெகு ஜன அங்கீகாரம் இயேசு ஆண்டவருக்கு வெகுவாய் கிடைத்தது. திரளான ஜனங்கள் முன்னும் பின்னும் வர நகர வீதியில் வலம் வந்தார். ஆகவே, இயேசு எருசலேம் தேவலாயத்துக்குள் பிரவேசித்து எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தபோது கூட அவருடைய எதிர்ப்பாளர்களால் அப்போது எதுவும் செய்ய முடியவில்லை (மாற்கு 11:1-11).

சரி, அன்று இராத்தங்க பெத்தானியாவுக்கு வந்து மீண்டும் எருச லேமுக்குப் போகும் போதுதான். நமது தலைப்புக்குண்டான சம்பவம் நடந்துள்ளது. மறு நாளிலே அவர்கள் பெத்தானியாவிலிருந்து புறப்பட்டு வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது இலைகளுள்ள ஓர் அத்திமரத்தை தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்க வந்தார். அத்திபழக்கால மாயிராத படியால், அவர் அதினிடத்தில் வந்த போது அதில் இலை களை யல்லாமல், வேறொன்றையும் காணவில்லை. அப்பொழுது இயேசு அதைப்பார்த்து; இது முதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியை புசியாதிருக்ககடவன் என்றார் (மாற்கு 11:12-14).

இந்தப் பகுதியைப் படித்து விட்டு புரிந்து கொள்ள முடியாமல் வாலிபன் ஒருவன் என்னிடத்தில் வந்தான். அத்திப்பழக்காலமல்லாத ஒரு சமயத்தில் கனியைத் தேடுவதே தவறு. ஆனால், தேடினது போதாதென்று அதை சபிக்கவும் செய்திருக்கிறாரே இயேசு. இது எப்படி நியாயமாகும்? என்று கேள்வி எழுப்பி தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினான். அவனால் இதன் பின்னனியை அறிந்து அதன் சாரத்தைப் புரிந்து கொள்ளவும் முடியவில்லை. அதே சமயம் இயேசுவைக் குறை சொல்லவும் மனமில்லை. அவன் சிந்தையில் அப்பொழுது பெரும் தடுமாற்றம். ஒருவேளை இப்பகுதியை கவனமாகப் படிப்பவர்களுக்கு இப்படிப்பட்ட எண்ணம் வர வாய்ப்புண்டு. அருமையானவர்களே! எப்பொழுதும் ஒன்றை

நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள். இயேசு ஆண்டவர் ஒரு போதும் தனது பூமியின் வாழ்க்கையில் தவறு செய்ததில்லை. தேவனுடைய வார்த்தை கூறுவதைக் கவனியுங்கள் அவர் பாவஞ் செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்பட வுமில்லை (1பேது 2:22). ஆகவே, இப்படிப்பட்ட சமயங்களில் நம்முடைய புரிந்து கொள்ளுதலில் உள்ள கோளாறைக் களைந்தெறிய முயற்சிக்க வேண்டுமேயொழிய தேவ குமாரன் மீது குறை சொல்லத் துணிந்துவிடக்கூடாது.

இங்கே, இயேசுவின் வார்த்தைகளில் மறைந்திருந்த உண்மை யைக் கண்டுபிடிப்பதற்கு அத்திமரத்தைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வது அவசியம். அத்திமரம் மற்ற மரங்களைக் காட்டிலும் வித்தியாசமானது என்று சொல்வதை விட விநோதமானது என்று கூறுவதுதான் சரியானது. பொதுவாகவே, உலகில் ஏனைய மரங்கள் அனைத்தும் துளிர்த்து, தழைத்து, பூத்துக்குலுங்கி, பிஞ்சாகி, காயாகி பிறகு கனிகொடுக்கும். ஆனால், பெலஸ்தீனா தேசத்தில் வெகுவாகக் காணப்பட்ட இம்மரங்களோ முற்றிலும் வேறுபட்டு, காய்த்து, கனிந்த பிறகு இலைகளைக் கொடுக்க ஆரம்பிக்குமாம். ஆக, இம்மரத்தில் இலைகள் இருந்தால் கனிகள் கட்டாயம் இருக்க வேண்டுமென்பது யதார்த்த நிலை. ஒருவன், இம்மரத்தில கனி இருக்குமா? இருக்காதா? என்பதை இதன் இலைகளைப் பார்த்துத் தெரிந்து கொள்ள முடியும்.

வேதாகமத்தின் பக்கங்களில் இம்மரத்திற்கு ஒரு சிறப்பிடம் உண்டு. தேவனால் எத்தனையோ மரங்கள் படைக்கப்பட்டிருந்தாலும், இதன் பெயர்தான் முதன் முதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் இலைகள் தான் ஆதிப் பெற்றோரின் நிர்வாணத்தை மறைக்க பயன் படுத்தப்பட்டுள்ளது (ஆதி 3:7). இன்னும் இம்மரங்களின் கனிப் பெருக்கம் ஒரு தேசத்தின் சுகமான வாழ்வுக்கும் (1ராஜா 4:25) கனியற்ற நிலைமை அதன் வீழ்ச்சிக்கும் அடையாளமாக குறிப்பிடப் பட்டுள்ளது. சராசரியாக 35 அடி உயரம் வரை வளரும் இம்மரம் கிளைகள் பலவிட்டு அகன்ற இலைகளைக் கொண்டிருப்ப தால் நல்ல நிழல் தந்து அநேகருக்குப் பயன்தரும் (மீகா 4:4 யோவா 1:48) இதன் கனிகள் நல்ல பதார்த்தங்கள் பல செய்வதற்குப் பயன்பட்டதோடு மாத்திரமல்லாமல் (1 சாமு 25:18) மருத்து ரீதியாகவும் உபயோகப் படுத்தப்பட்டுள்ளது (2 ராஜா 20:7).

இப்படி நன்மைகள் பல தரும் அத்திமரத்தை இயேசு சபித்திருக் கிறாரென்றால் அதற்குச் சரியான காரணம் இல்லாமலிருக்காது. கண்டிப்பாக தன் காலைப் பசியை ஆற்ற உதவவில்லையென் பதற்காக அவர் சபித்திருக்கமாட்டார். ஏனெனில், அவர் 40 நாட்கள் வெற்றி கரமாக உபவாசமிருந்த தேவகுமாரன். ஆகவே, ஒருவேளை உணவுக்காக அவர் அப்படிச் செய்திருக்கமாட்டார் அல்லது ஏதோ

அத்திமரம் தன்னை ஏமாற்றிவிட்டதென்று எரிச்சலடைந்தும் அதைச் சபித்திருக்கமாட்டார். ஏனெனில், காரித்துப்பிய போதும் கூட கலங்காமல் ஏற்றுக்கொண்டவர் அவர் அப்படியானால் பின்னே என்னதான் காரணமாக இருக்கும்? ஆம், மாயமான ஒரு தோற்றத்தோடு காட்சி தந்த அந்த மரத்தைக் கொண்டு, ஒரு மாபெரும் உண்மையை, ஒரு யதார்த்த செய்தியை, தன்னைச் சுற்றிலுமிருந்த மக்களுக்கும், இனிவரும் காலங்களிலெல்லாம், வாழும் மக்களுக்கும் உணர்த்த முடியுமென்று நம்பினதால் தான், அப்படிச் செய்திருப்பார் என்று நாம் திடமாகச் சொல்ல முடியும். அந்நாட்டில் ஏராளமாக இருந்த அத்திமரங்களில் ஒன்று பட்டுப் போவதைப் பற்றி அவர் அங்கு கவலைப்படாமல். எண்ணிலடங்காத மக்கள், அம்மரத்தைப்போல, மாயமான வாழ்க்கை வாழ்ந்து ஆவியில் பட்டுப்போய்விடக்கூடாது என்பதற்காகவே கவலைப்பட்டுள்ளார். அது மாத்திரமல்ல, போலி பக்தியோடு வெளி வேஷமிட்டு வாழ்பவர்களுக்கு ஒரு கடுமையான எச்சரிக்கை தேவையென்பதையும் உணர்ந்து சரியாகக் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் பயன்படுத்த எண்ணியுள்ளார். அதன் விளைவுதான் அத்தி மரம் சபிக்கப்பட்டது. புரிகிறதா?

சரி, இந்த வேத பகுதியிலிருந்து நாம் நமக்குப் பயன்படும் மூன்று பாடங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

**I. இயேசு என்ன தேடினார்? - என்ன தேடுகிறார்?**

முதலாவது, இயேசு அத்திமரத்தினிடத்தில் என்ன தேடினார்? என்பது. அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்தி மரத்தைத் தூரத்திலே கண்டு அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்க வந்தார் (வ.13) ஆம், இயேசு அதனிடம் கனிகளைத் தேடினார். இங்கே ஒன்றைக் கவனியுங்கள். மனுஷர் உள்ளத்திலிருப்பதை அறியும் இயேசுவுக்கு (யோவா 2:25) மரத்தில் கனியிருந்திருக்குமா அல்லது இருந்திருக்காதா என்பது தெரியாமாலிருக்க வாய்ப்பில்லை. ஆயினும், அதன் புறத்தோற்றம் அப்படியிருந்தபடியால் அவர் தேடினார். அத்திப்பழக் காலமாக இல்லாவிட்டாலும் கூட அம்மரம் தான் எல்லா அத்தி மரத்தைக் காட்டிலும் விசேஷமானது என்பதைப் போன்று மாயமான ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியிருந்தது, ஆகவே தான், இயேசு கனிகளைத் தேடினார். ஆனால், அங்கே கனியில்லை.

இயேசு அத்திரமத்தில் கனியைத் தேடினார் என்பதை விட மாயமான தோற்றத்தோடு சமுதாயத்தில் உலா வந்த யூதர்களிடம் ஆவியின் கனிகளைத் தேடினார் என்பதுதான் சரி. யூதர்களிடம் அவர் கனியைத் தேடினதற்கு காரணமும் இல்லாமலில்லை. ஆம், பூமியிலுள்ள சகல ஜனங்களிலும் அவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் (உபா 7:6) தேவனாலே பல அற்புதங்களைத் தங்கள் வாழ்க்கையில் கண்டவர்கள். ஆச்சரிய

மாக வழி நடத்தப்பட்டவர்கள். தேவனின் தெய்வீகப் பாதுகாப்பை அனுபவித்தவர்கள். ஆனால், அவர்களிடமோ, கனியற்ற ஒரு போலி வாழ்க்கை தான் காணப்பட்டது. அவர்களாலே ஒரு அத்திமரம் பட்டுப்போயிற்று, பாவம்.

அருமையானவர்களே! அன்று மாயமான தோற்றத்தோடிருந்த அத்திமரத்தினிடத்தில் கனிகளைத் தேடின இயேசு, தேவனால் விசேஷமாக தெரிந்து கொள்ளப்பட்ட யூதர்களிடத்தில் கனிகளைத் தேடின இயேசு, இன்று நம்மிடத்தில் கனிகளைத் தேடுகிறார். அன்று தேடினார், இன்று தேடுகிறார். ஆம், கிறிஸ்தவத்தில் நம்பிக்கை கொண்டுள்ள உங்களிடம், கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டுள்ள உங்களிடம், கிறிஸ்துவின் இரத்தத்தால் வாங்கப்பட்ட சபையில் அங்கம் வகிக்கும் உங்களிடம் கனிகளைத் தேடுகிறார்.

நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலர். தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் (எபே 1:4) இயேசுக் கிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலே அழைக்கப்பட்டவர்கள் (1தெச 2:14) ஒளியினிடத்திற்கு வரவழைக்கப்பட்டதோடு, ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாகவும், பரிசுத்த ஜாதியாகவும் அவருக்குச் சொந்தமானவர் களாகவும் மாற்றப்பட்டவர்கள் (1பேது 2:9) ஆனால், நம்முடைய வாழ்க்கை எப்படியுள்ளது? சிந்திப்போம். இயேசு நம்மிடம் உரிமை யோடும், ஆவலோடும் வரும்போது, கனிகளைப் பார்க்கிறாரா? அல்லது இலைகளை மாத்திரம் காண் கிறாரா? நெஞ்சிலே கையை வைத்து நாம் பதில் சொல்வோ மானால் நம்மிடம் ஆவியின் கனிகள் அறவே இல்லை என்பதுதான் உண்மை. நம்முடைய பக்தியின் இலட்சணம் இந்தளவு தானே உள்ளது?!

யோவான் நற்செய்தி நூலில் வரும் ஓர் அழகான வசனத்தைக் கவனியுங்கள். "...ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத் திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்..." (15:5).

எனக்கருமையான சகோதரனே, சகோதரியே! நம்முடைய கிறிஸ்தவ ஜீவியம் இலைகளை மாத்திரம் கொண்டிருக்கக் கூடியதாக இருந்தால் நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கவில்லையென்பது பொருள். ஆகவே, நாம் இலைகளோடு, கனிகளையும் கொண்டிருக்க கிறிஸ்துவிலும், அவருடைய உபதேசங்களடங்கிய புதிய ஏற்பாட்டி லும் நிலைத்திருப்போம்.

## II. இயேசு என்ன கண்டார்? - காண்கிறார்?

கனியை ஆவலோடு தேடி அத்திமரத்தின் அருகில் வந்த இயேசு என்னத்தைக் கண்டார்? வசனம் சொல்வதைக் கவனியுங்கள். இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை (வச. 13) எப்படிப்பட்ட ஏமாற்றம் பாருங்கள். ஏற்கனவே சொன்னது போல்.

அவரை ஏமாற்றியது அத்திமரம் என்று மாத்திரம் நினைத்து விடாதீர்கள். யூத மதத் தலைவர்களும், யூதர்களும் சேர்ந்தே இயேசுவை ஏமாற்றியிருந்தார்கள். ஆகவே தான், மத்தேயு 23ம் அதிகாரம் முழுவதும் திட்டித் தீர்த்தே எழுதப்பட்டுள்ளது. அந்த அதிகாரத்தில் உள்ளது போல கடுமையான வார்த்தைகளை இயேசு தனது ஊழியத்தின் பாதையில் பெரும்பாலும் உபயோகித்ததில்லை. அந்த மாயக்காரர்களுடைய வாழ்வில் ஒரு கனி கூட இல்லாமல் இலைகளை மாத்திரம் கண்டதால் தான் அந்தளவு சுடு சொற்கள் நமதாண்டவரிடமிருந்து எகிறி வந்துள்ளது.

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே! நம்முடைய வாழ்க்கையில், கிறிஸ்தவத்தில் நம்பிக்கை கொண்டுள்ள நமது வாழ்க்கையில், கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்கும் பாக்கியம் பெற்ற நமது வாழ்க்கையில் இயேசு இன்றைக்கு என்னத்தைக் காண்கிறார்?

இந்த இடத்தில் நாம் நம்மை தற்பரிசோதனை செய்து பார்ப்பது அவசியம். மெய்யான தேவனை நான் தேவனாகப் பெற்றிருக்கிறேன் என்று மார்தட்டிக் கொள்ளுகிறோம். பரலோகம் செல்ல கிறிஸ்துவின் மார்க்கம் தான் ஒரே மார்க்கம் என்று பெருமை பேசவும் நாம் தவறுவதில்லை. கர்த்தருடைய சபைதான் உண்மையானதென்று எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டுமென்று பேராசையும் படுகிறோம். அது மாத்திரமல்ல வேதம் பேசுகிற இடத்தில் நாங்கள் பேசுகிறோம் என்றும் வேதம் பேசாத இடத்தில் நாங்கள் மௌனமாக இருக்கிறோம் என்று தம்பட்டம் அடிக்கவும் செய்கிறோம்.

ஆனால், உண்மை நிலை என்ன? மிகப்பெரும்பாலும் இலைகள் உள்ள வாழ்க்கையாகவே உள்ளது. மெய்யான தேவனைப் பற்றிய பயம் நம்மவர்களிடம் மருந்துக்கும் இல்லை. கிறிஸ்துவின் மார்க்கத்தைப் பற்றிய முழு உண்மை தெரியவில்லை. புதிய ஏற்பாட்டு சபையின் மேன்மையை விளங்கிக் கொள்ள முடியவில்லை. ஒரு வேளை அதை அறிந்திருந்தாலும் அதன்படி வாழ வேண்டுமென்ற வாஞ்சையும், வைராக்கியமும் இல்லை. இவையனைத்தும் இலைகள் மாத்திரமுள்ள வாழ்க்கையின் அடையாளங்களே. இப்படிப்பட்ட வாழ்க்கையை தேவன் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

நம்முடைய ஆன்மீக வாழ்க்கை இலைகள் மாத்திரம் உடையதாயிராமல் கனிகளையும் பெற்றிருக்க வேண்டுமானால் அது தேவனுடைய வார்த்தைகளால் சாரமேற்றப்பட்டிருக்க வேண்டும். அதாவது, வேத வசனங்களுக்கு மாறாக எதையும் செய்யமாட்டேன் என்ற தீர்மானம் எடுப்பதோடு நின்றுவிடாமல் வேத வசனங்களின் போதனைக்கு மாத்திரம் என்னை ஒப்புக்கொடுப்பேன் என்றும் முடிவு செய்ய வேண்டும். அதன் பொருள், நம்முடைய இரட்சிப்பு, நாம் அங்கம் வகிக்கும் சபை, நம்முடைய ஆராதனை முறை இவைகளெல்லாம் வேத வசனங்களினடிப்படையில் இருக்கிறதா? என்று

முழுமையாக சோதித்து உறுதி செய்து கொள்ள வேண்டும். ஏதாவது ஒன்றிலே தவறு செய்தால் கூட எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப் பான் என்று வேதம் கூறுகின்ற படியால் (யாக் 2:10) நம்முடைய ஆன்மீக வாழ்க்கையை கவனமாக சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். ஆம், ஒன்றிலே தவறிருந்தால் கூட நமது வாழ்க்கை கனியற்ற இலைகள் மாத்திரம் உள்ள வாழ்க்கையாகவே காட்சி தரும்.

அன்று அத்திமரத்தை கண்டு இயேசு ஏமாந்ததைப் போல நம்முடைய வாழ்க்கையை கண்டு ஏமாந்து போவார். அவரை அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கும் நாம் அவரை ஏமாற்றுவது தவறு மாத்திரமல்ல, பாவமும் ஆகும். பாவம் நம்மை நரகத்திற்கு அழைத்துச் செல்லும். ஆகவே, இந்த கபட வாழ்வுக்கு இந்நிமிடம் முதல் சாவு மணி அடிப்போம்.

**III. இயேசு என்ன செய்தார்? - என்ன செய்வார்?**

இறுதியாக நாம் அறிந்து கொள்ள வேண்டியது, அத்திமரத்திடம் கனியைத் தேடி இலைகளை மாத்திரம் கண்ட இயேசு என்ன செய்தார் என்பது "இதுமுதல் ஒருக்காலும், ஒருவனும் உன்னிடத்தில் கனியை புசியாதிருக்கக்கடவன்" என்றார். (வச 14). ஆம், வேஷமிட்ட விருட்சத்தை சபித்தார். நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்த இயேசு இங்கே எவ்வளவு கடுமையாக நடந்து கொண்டார் என்பதை கவனிக்கத் தவறி விடக்கூடாது. இந்தப் பருவத்திலே மாத்திரமல்ல "ஒருக்காலும்" கனி இருக்காது என்றார். மறுநாள் காலையில் பார்க்கும் போது மரம் "பட்டுப்போயிருந்தது" என்று வசனம் சொல்கிறது (11:20).

ஏற்கனவே, நாம் பார்த்தது போல அத்திமரத்தைச் சபித்து அதைப் பட்டுப்போகச் செய்ய வேண்டுமென்பது அவருடைய ஆசையல்ல. ஆனால், தன்னை சுற்றி நின்றவர்களிலும், யூத சமுதாயத் திலும் இருக்கிற ஏராளமான மக்களின் வேஷத்தை, போலியான பக்தியை, மாயமான தோற்றத்தைக் களைந்தெறிய வேண்டுமென்பது அவரின் ஒரே நோக்கம். அங்கே நடப்பதை பார்த்து ஜனங்கள் திருந்த வேண்டுமென்பது அவரின் அதிரடித் திட்டம்.

பழைய ஏற்பாட்டின் நாட்களிலே பார்க்கும்போது அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட தேசம் கனிகொடாத வாழ்க்கை வாழ்ந்த போது, பூமியின் சகல ஜனங்களுக்குள்ளும் அவர்கள் சிதறிப்போகும் படி தேவன் செய்தார் (1ராஜா 9:6-9).

எனக்கு அன்பானவர்களே! கனியில்லாத அத்திமரத்தையும், தனக்கு உண்மையில்லாத இஸ்ரவேல் தேசத்தையும் தண்டித்த நம் ஆண்டவர் நம்மை மாத்திரம் சும்மாவிட்டுவிடுவாரா என்ன? அவரை நாம் நீதியுள்ள தேவன் என்று வாய் நிறையச் சொல்லுகிறோம். அது உண்மையானால், அந்த நீதியை நம்மீது செலுத்தாமல் விடுவாரா? கண்டிப்பாக நீதியாக நியாயந்தீர்த்தே தீருவார்.

யோவான் 15:6ல் கனி கொடாத கொடி அக்கினியிலே போடப் படும் என்று காண்கிறோம். கவனிக்க மறந்துவிடாதீர்கள் அக்கினியிலே என்று உள்ளதை. அதாவது எரிந்து, வெந்து, முடிந்து போகும் அக்கினியில் போடப்படும். மத்தேயு 25:14ம் வசனம் அங்கு இறுதி நியாயத்தீர்ப்பில் இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து இவ்விதம் சொல்வார் என்றுள்ளது. சபிக்கப்பட்டவர்களே என்னை விட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் என்று.

ஆம், நித்திய அக்கினி, அது முடிவில்லாத அக்கினி, எரிந்தும் முடிந்து போகாத அக்கினி. மரத்திற்கு முடிந்து போகும் அக்கினி, மனிதனுக்கு நித்திய அக்கினி. நீதியுள்ள நியாதிபதியாகிய இயேசு கனி கொடாத மனிதனை, இலைகள் மாத்திரமே கொண்டுள்ள மனிதனை இவ்விதமாகவே நியாயந்தீர்ப்பார். தப்புக் கணக்கு போட்டு விடாதீர்கள்.

ஆகவே அன்பானவர்களே! இருதயத்தை சோதித்தறியும் தன்மை கொண்ட தேவனுக்கு முன்பாக நாம் பயந்து நமது வாழ்க்கை யில் அவரின் வல்லமையான வசனங்களுக்கு நடுங்கி ஜீவிப்போம். இலைகள் மாத்திரம் உள்ள ஒரு போலியான வாழ்க்கைக்கு முடிவு கட்டிவிட்டு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுடைய உபதேசத்தில் நிலைத்திருந்து, நிறைந்த கனிகளை கொடுத்து சபைக்கும், சமுதாயத் துக்கும் சாட்சியாக வாழ்வோம். தேவ ஆசீர்வாதம் பெறுவோம். மறுமையை சுதந்தரித்து அவரோடு கூட நித்திய வாழ்வு வாழ்வோம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**S. ராஜநாயகம்**

கடந்த அக்டோபர் 8,9-2008 ஆகிய தேதிகளில், காங்கயத்தில் நடந்த 11-ம் வேதாகம கருத்தரங்கிற்கு, தமிழகத்தின் நான்கு திசைகளிலு மிருந்து திராளாக வந்திருந்த உங்கள் யாவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவிப்ப தோடு, 12 விலையேறப்பெற்ற ஆத்துமாக்கள் சாத்தானின் கோரப் பிடியிலிருந்து மீட்டெடுக்கப்பட்டார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்.

– ஆசிரியர்.

# மாபெரும் பொக்கிஷம்

இயேசு பரலோக ராஜ்யம் அல்லது கட்டப்படும் திருச்சபை எவ்வாறாக இருக்கும் என்று பல விளக்க உவமைகள் மூலம் கூறினார். அவற்றில் இரண்டு உவமைகள் ஒன்று போல் இருக்கின்றன.

அன்றியும் பரலோக ராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் கண்டு மறைத்து, அதை பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தை வாங்குகிறான். மேலும், பரலோக ராஜ்யம் நல்லமுத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று அதைக் கொள்ளுகிறான். (மத்தேயு 13:44-46)

உவமைகள் என்று சொல்வதை தற்காலத்தில் எடுத்துக்காட்டு என்றும் சொல்லாம். உலகப் பிரகாரமான கண்ணால் காணக்கூடிய ஒன்றை வைத்துக்கொண்டு அதன் மூலம் பரலோக சத்தியங்களை விளக்குவது. இந்த இரண்டு உவமைகளிலும் பரலோக ராஜ்யம் அல்லது கிறிஸ்துவினுடைய சபை என்பது நிலத்தில் புதைக்கப்பட்ட ஒரு பொக்கிஷம் என்று கூறுகிறார். உலகப் பிரகாரமான பொக்கிஷம் தங்கம், வெள்ளி விலையுயர்ந்த நகைகள் போன்றவை; முக்கியமானதும் விலையுயர்ந்ததுமானது. மேலும், இந்தப் பொக்கிஷம் மறைக்கப்பட்டதாகவும் கவனிக்ககூடாததுமாய்க் கூறப்படுகிறது. மற்றவர்கள் இதைக் காணவில்லை அல்லது, கண்டும் அதன் மதிப்பை அறிந்து கொள்ளவில்லை அதன் மதிப்பை உணராதபடியால் அப்படியே போய்விட்டனர். ஆனால் இந்த மனுஷன் தேடியதன் விளைவாகவோ அல்லது எதிர்பாராத விதமாகவோ, கண்டு கொள்ளுகிறான். அதைக் கண்ட பின், அதன் மதிப்பை உணர்ந்து மறைத்து வைக்கிறான். பிறகு தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று அந்த நிலத்தை வாங்கிக் கொள்கிறான். அந்த நிலம் வாங்கப்பட்டபின் மறைந்து கிடக்கும் பொக்கிஷமும் அவனுக்குச் சொந்தம். அது பற்றி அவன் விரும்பியபடி செய்து கொள்ளலாம். இரண்டாவது உவமையும் முதலாவது கூறப்பட்டது போன்றதே. ஆனால், இதில் இந்த மனுஷன் முத்துக்களை தேடிக் கொண்டிருக்கிறான். ஏதோ ஒரு முத்துக்காக அல்ல தனிச்சிறப்புள்ள விலையேறப்பட்ட முத்துக்காளாக தேடிக் கொண்டிருக்கிறான். அதன் மதிப்பே மற்ற எல்லாவற்றையும் விட அதிகமானது அவன் ஒரு வியாபாரி. எதைத் தேடுகிறோம் என்பதை

அறிந்திருந்தான். அவன் தேடினான், அதில் வெற்றியும் கண்டான் அந்தத் தனிச்சிறப்புப் பெற்ற முத்தைக் கண்டுபிடித்த பின், தனக்குண்டான யாவற்றையும் விற்று விலையேறப்பட்ட முத்தை வாங்குகிறான். அந்த முத்து அவனுடையதாகவும் அதைத்தன் விருப்பப்படி வைத்துக்கொள்ளக்கூடியதாகவும் இருந்தது. அவன் அதை வைத்துக் கொள்ளலாம். பிறருக்குக் காட்டாமல் அல்லது பெரிய லாபத்துக்கு விற்றுவிடலாம்.

நமது வாழ்க்கையிலும், சிலர் நிலங்களை வாங்கி உயர்ந்த விலைக்கு விற்று அதன்மூலம் நல்ல லாபம் சம்பாதிக்கிறதை காண்கிறோம். ஒருவேளை அது ஒரு எண்ணைக் கிணறாக இருக்கலாம், அல்லது மரங்களடர்ந்த காடாக இருக்கலாம். அவைகளை விற்று லாபத்தைக் கொண்டு வால்-மார்க்கட், சாம்ஸ் அல்லது மைக்ரோசாஃப்ட் ஆகியவற்றில் முதலீடு செய்து பெரும் பொருள் ஈட்டலாம் இந்த முயற்சியில் சிலர் வெற்றியும், பலர் தோல்வியும் காண்பது ஏன்? ஏனெனில், அந்த முயற்சியில் எதைப் பெற விழைகிறோம், என்ன தரிசனம், அந்தத் தேடுதலுக்கு, என்ன கிரயம் செலுத்துகிறோம். அதற்கு தக்க பலன் தான் கிடைக்கும். பலருக்கு தமக்கு கிடைப்பதோடு திருப்தி அடைந்து எங்கே எந்த நிலையில் இருந்தாலும் போதும். அவர்கள் அதற்காக அதிக முயற்சி செய்வதில்லை, மேலே கீழே எதுவாயினும் அவர்களுக்குப்போதும். அதனால் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் அந்த சிறந்த பொக்கிஷத்தைக் கண்டுபிடிப்பதில்லை.

ஆவிக்குரிய பொருளில் ராஜ்யம் என்றால் சபை என்பது தேவ சத்தியம் அதுவே பொக்கிஷம். அது உலகில் இருக்கிறது; இருந்து கொண்டுதான் இருக்கிறது; அது ஏதோ ஒரு சபையல்ல, பலவற்றில் ஒரு சபையுமல்ல அவ்வளவுதான்.

திருச்சபையைப் பற்றிய குறிப்பை நாம் இப்பொழுது பார்ப்போம். ராஜ்யம் அல்லது கர்த்தருடைய சபை - இதைப்பற்றித் தான் வேதம் கூறுகிறது. நமது ஆண்டவர் எருசலேமில் சபை கட்டிய பிறகு (அப்போஸ்தலர் - அதிகாரம் - 2) எங்கோ ஒரு இடத்தில் அது இருந்து கொண்டிருக்கிறது. இது நாள் வரையிலும், இனிமேலும் இருக்கும். நித்திய காலமாக இருக்கும். (லூக்கா 1:33,1கொரி 15:24)

கிறிஸ்துவினுடைய சபையானது தெளிவாக விளக்கமாக வேதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மக்கள் அதை கண்டு பிடிக்க முடியவில்லை ஏனெனில், பெரும்பான்மையானவர்கள் அதில் ஆர்வம் காட்டவில்லை அல்லது அதைத் தேடவில்லை; ஒரு வேளை கண்டுபிடித்தாலும் அதன் மேன்மையை உணர்ந்து கொள்வதில்லை. மக்கள் பல்வேறு திசைகளில் செல்கின்றன, பல இடங்களில்

பார்க்கிறார்கள், உண்மையான பொக்கிஷத்தைக் காணாத குருடர்களாகி விடுகிறார்கள். மெய்யான பொக்கிஷத்தை ஏற்றுக் கொள்ளாமல், ஏமாற்றப்பட்டு, போலியான ஏதோ ஒன்றில் போய் முடிகிறார்கள். அந்தச் சபை மனிதர்களால் துவக்கப்பட்டது, மனிதர்களால் நிர்வாகிக்கப்படுகிறது. அவர்களில் நிறுவனங்கள் கூட நிறை வேற்ற முடியாத ஒன்றில் போய் இவர்களின் தேடுதல் முடிந்து விடுகிறது. மனிதர்கள் ஏற்படுத்திய பாரம்பரியம் மனிதன் உண்டாக்கிய மதம் - இன்று இவைகள் தான் காணப்படுகின்றன. மெய்யான பொக்கிஷத்தை காண்பதே இல்லை. மனிதன் உண்டாக்கிய மதத்திற்காக முயற்சியோ அர்ப்பணிப்போ தேவையில்லையே. அதனை பெரிய கிரயம் கொண்டு பெறவேண்டியதுமில்லையே.

இயேசு இதைப்பற்றி இவ்வாறு கூறுகிறார். பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே!! என்று சொல்கிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே!! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலேயே பிசாசுகளை துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினால் அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியேன்; அக்கிரமச் செய்கைக்காரரே என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்கு சொல்லுவேன் (மத். 7:21-23).

இயேசு கூறிய அந்த விலையேறப்பட்ட பொக்கிஷத்தை நாம் இந்தக் காலங்களில் காணக்கூடுமா? உண்மையில் அதனைத் தேடினால் காண முடியும். தேவனுடைய வார்த்தையை ஆழமாகவும், வாஞ்சையுடனும் கற்போமாகில் அதனைக் காண முடியும். அது எளிமையாகவும், விளக்கமாகவும் இருக்கிறது. பொக்கிஷத்தை உண்மையாக அதன் மதிப்பை உணர்ந்து தேட வேண்டும். அந்த பொக்கிஷத்துக்காக எல்லா தடையான காரியங்களை அகற்றிவிடத் தயாராகி, என்னவந்தாலும் தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிவேன் என்றிருப் பானாகில் அதைக் கண்டு கொள்வான். தேவன் மேல் நம்பிக்கை வைத்து பாவத்துக்கு வருந்தி மனந்திரும்பி, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ் நானம் பெற்று கர்த்தரின் சபையின் அங்கத்தினரானால் அந்தப் பொக்கிஷத்தைக் கண்டு கொண்டவன் ஆவான். அவன் முறுமுறுத்துக் கொண்டும் தேவனிடம் வாக்கு வாதம் செய்து கொண்டும் வேறு எவரிடமும் தர்க்கம் செய்து கொண்டும் இருக்கமாட்டான். கர்த்தாவே நீர் கட்டளை தாரும் நான் செய்கிறேன் என்று கூறும் மனோபாவம் இருக்கும் பொக்கிஷத்தைக் கண்டபின்னர்

தனக்குச் சொந்தமாக்கிக் கொண்ட பின் தேவன் தனக்கு என்ன கட்டளையிடுகிறாரோ அதன்படி செய்து அந்தப் பொக்கிஷத்தைத் தனதாக்கிக் கொள்வான். இதற்கு ஏதாவது பலன் உண்டா? முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் நீதியையும் தேடுங்கள். இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்று இயேசு கூறினார் (மத். 6:33).

அந்தப் பொக்கிஷத்தை நாம் பெற்றுக் கொண்டபின் நமக்கு எப்படி இருக்கும் என்று சற்று எண்ணிப் பார்ப்போம். பரலோக ராஜ்யம் அந்தச் சபை, இது சத்தியம்; அதனால் இரட்சிக்கப்பட்ட ஆத்துமா, நித்திய ஜீவனைப்பற்றிய நம்பிக்கை, ஆம் இத்தனையும் அதன் பலன்களல்லவா! தேவ சித்தத்தைச் செய்தோம் என்று வார்த்தைகளின் மேல் நிலைநிற்கிறவன் வித்தியாசமான ஓர் மனுஷனாக இருக்கக்கூடும். கிறிஸ்து ஸ்தாபிப்பேன் என்று சொன்ன அந்தச் சபையின் உறுப்பினராக இருக்கிறோம் என்ற எண்ணம் எவ்வளவு அருமையானது. (மத் 16:18) எந்த மணவாட்டிக்காக அவர் மரித்தாரோ (எபேசி 5:23) எந்தக் கூட்ட மக்களின் இரட்சகராக இருக்கிறாரோ, எதற்காக ஒருநாள் திரும்ப வருவாரோ, எவர்களை அழைத்துச் சென்று தேவனிடம் ஒப்படைப்பாரோ, எவருடன் நித்திய காலமாக இருப்பாரோ அந்த நிலை எவ்வளவு பரவசமானது (1கொரி 15:23,24).

உங்கள் பொக்கிஷம் எது? இயேசு கூறிய அந்தப் பொக்கிஷத்தை நீங்கள் கண்டுகொண்டீர்களா? அதைச் சுதந்தரித்துக் கொண்டீர்களா? நித்திய ஜீவன் என்னும் பொக்கிஷத்தைப் பெற வேண்டுமானால், நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்! பெறவும் முடியும்.

**J.C. சோட்**

## அற்புதங்களின் நோக்கம்

| | |
|---|---|
| மாற் 16:20 | வசனத்தை உறுதிபடுத்த |
| அப். 2:22 | இயேசுவை கிறிஸ்துவென்று தேவனுடைய குமாரென்று நிரூபிக்க |
| யோவா 16:13 | வேத வசனங்களைப் பூரணமாய் வெளிப்படுத்த |
| யோவா 20:30,31 | இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க |

பெண்கள் பகுதி

# தாய்மார்களே, உங்கள் பிள்ளைகளுக்கு போதித்துப் பயிற்சியளியுங்கள்

அதிவேகமானதும், பரபரப்பானதுமான இவ்வுலகில், அநேக காரியங்களை நாம் செய்ய வேண்டியது இருந்தாலும், அக்காரியங் களை செய்வதற்கு குறைவான நேரமே உடையவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பரிதாபகரமாக, நமது பிள்ளைகள் நாம் கொடுக்க வேண்டிய முக்கியத்துவப்பட்டியலில் கடைசியாக இடம் பெறுகிறார்கள்.

பெற்றோர்கள் செய்யும் கடமைகளுக்கான அணுகுமுறையில், மக்கள் வெவ்வேறு கருத்துடையவர்களாக பிரிந்திருக்கிறார்கள். அவைகளில் மூன்றை நாம் இப்பொழுது கவனிப்போம்.

✪ **முதலாவதாக,** நாம் பார்க்கும் பொழுது சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளும், பிள்ளைகளும் மிகவும் சிறிய வயதில் இருக்கின்றனர், அவர்களுக்கு உணவு கொடுத்து, உடை கொடுத்து வளர்ப்பதே போதும் மற்ற காரியங்கள் எல்லாம் அவர்கள் வளர்ந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணிவிடுகின்றனர். பிள்ளைகள் வாலிபப் பருவம் அடைந்தவுடன் அவர்கள் என்ன நினைக்கிறார்கள், அவர்களை துன்பப்படுத்தும் பிரச்சினை என்ன, அவர்களுடைய விருப்பு, வெறுப்பு ஆகியவைகள் மீது கவனம் செலுத்திக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள்.

சிறுவர்கள் "அற்பமானவர்கள்" அல்ல. வாலிபத்தை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில் இருக்கிறவர்கள் தான் இச்சிறார்கள். அவர்களை பற்றிய அனைத்து காரியங்களும் முக்கிய மானதே, அதுவும் இந்த ஆரம்ப கால வருடங்களில் அவைகள் இன்னும் முக்கியமானதாக இருக்கிறது! நான் ஒரு வாலிபனை வளர்க்கிறேன், நான் அவளுக்கோ / அவனுக்கோ போதிக்கும் காரியங்கள், அவர்கள் வயது வந்து பக்குவமடையும் காலத்தில் வாழ்க்கையை எப்படி அணுகுவாள் / அணுகுவான் என்பதை தீர்மானிக்கும் என்பதை நாம் மனதில் கொண்டால், பிள்ளை வளர்க்கும் விதம் மிகச் சிறப்பானதாக அமைந்து விடும்.

முதல் 5 வயது என்பது மனதளவிலும், உணர்விலும் வளரும் பருவமாகும். எவ்வளவுக்கதிகம் நாம் நேரத்தை செலவு செய்து கற்றுக் கொடுத்து, அவர்களோடு பழகி, போதிக்கிறோமோ அவ்வளவுக்கதிக

மாக அவர்கள் பக்குவமடைய முடியும். பரிசுத்த வேதாகமம் இதைப் பற்றிப் பேசும்போது, "நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத் திலும், ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின் மேல் அடையாளமாக கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாக வைத்து, அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக் கொள்கிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசுவீர்களாக" (உபாகமம் 11:19,20) என்று சொல்லுகிறது. உணவு தயாரிக்கும் வேளையானாலும், பயண நேரமானாலும், துணி களை மடித்து வைக்கும் நாழிகையானாலும் சரி, தேவனுடைய வார்த்தையில் நமது பிள்ளைகளை கட்டுவிக்க, இத்தருணங்களை நாம் தவறவிடக்கூடாது என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

✪ **இரண்டாவதாக,** பிள்ளை வளர்ப்பு பற்றிய பெற்றோர்கள், கொண்டிருக்கும் தவறான கருத்து என்னவென்றால், "அளவுக் கதிமான காரியங்களை அவன்மேல் சுமத்த வேண்டாம். குழந்தைப் பருவத்தை அவன் சந்தோஷமாக அனுபவிக்கட்டும். இன்னும் கொஞ்ச காலத்தில், அவன் வளர்ந்து, தொடர்ந்து பொறுப்புகளை சுமக்க வேண்டியதிருக்கிறது" என்பார்கள். இதன் விளைவு அதிக பிரச்சினையை நமக்குக் கொண்டு வரும்.

நிச்சயமாக, ஒரு குழந்தை பெரியவர்களுக்காக பொறுப்பை ஏற்று நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால், இளம் வயதில் சற்றும் பொறுப்பற்று தன் இஷ்டப்படி செய்ய அனுமதிக்கவும் கூடாது. ஏனென்றால் திடீர் என்று ஒரு நாள் எல்லாம் முடிந்து விடும். வீட்டை விட்டு வெளியே சென்று கல்லூரி படிப்பை முடிப்பான், வேலையைப் பெற்றுக்கொள்வான், பிறகு தன் சொந்தக் குடும்பத்தை நடத்த ஆரம்பித்து விடுவான் அவன் இளம் பருவத்தில் எந்த ஒரு பயிற்சியும், ஒழுக்கமும் இல்லாமல் வளர்ந்து விட்டு குடும்பம் நடத்த ஆரம்பித்த வுடன், கப்பலில் இருந்து கடலில் குதித்தவன், திடீரென்று தன்னைக் காத்துக்கொள்ள உதவும் காற்றினால் நிரப்பப்பட்ட உடையை தொலைத் தவன் போல், எதைச் செய்யவேண்டும், எவ்வாறு செய்ய வேண்டும் என்று அவனுக்குத் தெரியாமல் தவிப்பான். தன் பொறுப்பைத் தட்டிக் கழிக்க ஆரம்பித்து விடுவான் கடைசியில் குடும்பத்தையும் வெறுக்க நேரிடும்.

✪ **மூன்றாவதாக,** இன்னும் ஒரு வகையான பெற்றோர் பிள்ளைகள் உறவைப் பற்றிப் பார்ப்போம். தனக்கு முன்பாக ஒரு நல்ல முன்மாதிரி இருக்குமானால் அதைப் பார்க்கும் குழந்தை தானும் அதைப்போலவே தன்னை வளர்த்துக் கொள்ளும். ஞானமுள்ள, பொறுமையுள்ள மற்றும் எதிர்காலத்தைப் பற்றிய ஒரு தெளிவுள்ள பெற்றோர் இந்த வகையில் தங்கள் மக்களை வளர்ப்பார்கள்.

"பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்" என்று ஞானி சாலமோன் கூறுகிறார் (நீதி 22:6).

பெண் பிள்ளைகள், சிறுவயதாய் இருக்கும்போதே அவர்கள் கற்றுத்தரப்படவேண்டும். ஏனென்றால் அவர்கள்தான் எதிர்காலத்தில் மனைவிகளாக, தாய்மார்களாக, வீட்டை உருவாக்கிறவர்களாக மாறப் போகிறார்கள். எந்த ஒரு பிள்ளை சிறுவயதில் தன் வயதிற்கு கீழ் இருக்கும் பிள்ளைகளை குழந்தைகளை போல் பாதுகாத்து கவனித்துக் கொள்கிறார்களோ அந்தப் பிள்ளை பலமான தாய்மைத்துவ உணர்வை பெற்றுக்கொள்கிறாள். இதே உண்மை தான் சமையல் செய்தல், வீட்டை சுத்தம் செய்தல், மேசை நாற்காலிகளை சுத்தம் செய்தல், பாத்திரங்களை கழுவுதல் போன்ற காரியங்கள் பெண் பிள்ளைகளின் வாழ்வில் அமைகிறது.

சிறுபையன்கள் தங்கள் வீட்டில் இருக்கும் காரை கழுவி சுத்தம் செய்தல், அதை பாதுகாத்தல், வீட்டை சுற்றிலும் நடக்கிற காரியங் களில் கவனமாய் இருத்தல், தோட்டத்தை சீராக வைத்தல், புல்களை அழகாக வரிசைப்படுத்துதல் போன்ற ஆண்களின் வேலைகளை செய்து பழக வேண்டும். ஒருவேளை அவன் தனித்து அந்த வேலை களை செய்ய முடியாவிட்டால் தகப்பன் அதை அறிந்து அவனோடு கூட வேலை செய்து அவனை ஒரு பொறுப்புள்ளவனாக வளர்க்க வேண்டும். பிள்ளைகள் நம்மை கேட்பதன் மூலமா? அல்லது நம்மை பார்ப்பதின் மூலமா? எப்படிக் கற்றுக்கொள்கிறார்கள்.

ஒவ்வொரு நாளும் நம் பிள்ளைகள் எப்படி நடக்கவேண்டும் காரியங்களை எப்படிச் செய்ய வேண்டும் என்று நாள் தவறாமல் அவர்களுக்கு போதித்து சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும்.

அதைவிட முக்கியமாக நாம் வாழ்ந்து காட்டுவது முக்கியம், நாம் பல வார்த்தைகளை மணிக்கணக்காக பேசிக் கொண்டேயிருக் கிறோம். ஆனால் நாம் ஒரு நாளைக்கு 24 மணி நேரம் வாழ்ந்து கொண்டிருக்கி றோம். இயற்கையாகவே நம் பேச்சைவிட நம் வாழ்வுதான் அவர்களை பல மடங்கு கற்றுக் கொள்ள உதவி செய்யும்.

இதுதான் உண்மையும்கூட, எப்போது பார்த்தாலும் தன் கணவனுடன் வாக்குவாதம் பண்ணிக் கொண்டு, குடும்பத்தில் தன் பேச்சுதான் எப்பொழுதும் எடுபட வேண்டும் என்று நினைத்து வாழும் ஒரு பெண், தன் பிள்ளை எதிர்காலத்தில் ஒரு கீழ்ப்படிதலுள்ள மனைவி யாகவும், பிறரை மதிக்கின்ற ஒரு மனைவியாகவும், திகழ வேண்டும் என்று எதிர்பார்க்கவே முடியாது. அதேபோல் எப்போதும் தன் மனைவி யை கடிந்து கொண்டும், அடக்கியும் வைத்திருக்கும் ஓர்

ஆண் தன் மகனுக்கு மனைவியில் அன்பு கூற வேண்டும், அதாவது கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்ததுபோல அன்பு கூற வேண்டும் என்ற உண்மை யை உணர வைக்க முடியாது. வாழ்க்கை எப்படி வாழ வேண்டும் என்ற பேருண்மைகளை நம்மைப் பார்த்துத்தான் நம் பிள்ளைகள் கற்றுக் கொள்ளப்போவதால் நாம் சிறந்த முன்மாதிரிகளாக இருப்பதில் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். பெண்களாகிய நாம் அப்படி இருக்கும்படி தேவன் தாமே உதவி செய்வாராக!.

**B.B. CHOATE** **R.R.NAYAGAM**

## நாளும் நடப்பும்

1. சந்திராயனம் விண்கலத்துடன் சீறிப்பாயத் தயாராகும் பி.எஸ்.எல்.வி
2. இந்திய – அமெரிக்க அணுசக்தி உடன்பாட்டுக்கு ஒப்புதல் கொடுத்து அதை அமலாக்க வகை செய்யும் சட்டத்தில் அமெரிக்க அதிபர் ஜார்ஜ்புஷ் கையெழுத்திட்டார்.
3. இந்தியப் பொருளாதாரம் குறித்து முதலீட்டாளர்கள் அச்சமடையத் தேவையில்லை என்று ரிசர்வ் வங்கி கவர்னர் டி. சுப்பாராவ் கூறுகிறார்.
4. மின்வெட்டு அதிகரிக்கப்பட்டு இருப்பதைத் தொடர்ந்து கடலூர் தொழிற்சாலைகளுக்கு ரூ. 100 கோடி கூடுதல் செலவு.
5. டீசல் ஜெனரேட்டர் மின்சாரத்துக்கு உற்பத்திச் செலவை வழங்க வேண்டும் என்று பஞ்சாலைகள் சங்கம் தெரிவித்துள்ளது.
6. மதவெறி தூண்டுவோர் மீது குண்டர் சட்டம் பாய வேண்டும் என பாமக நிறுவனர் எஸ். ராமதாஸ் தெரிவித்தார்.
7. தேவாலயங்களில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்த நடவடிக்கை எடுக்குமாறு சென்னை மாநகர போலீஸ் கமிஷனர் வலியுறுத்தியுள்ளார்.
8. பெங்களூரில் நடந்த இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான முதல் கிரிக்கெட் டெஸ்ட் டிராவில் முடிந்தது.

வாலிபர் பகுதி

# ...நீ யார்?

தேவனுடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. உங்கள் அனைவருக்கும் நாம் எல்லோரும் நீதிமான்களாக்கும்படி உயிர்த்தெழுந்து நமக்காக பிதாவிடம் பரிந்துப் பேசுகிறவரும், ஆண்டவரும் இரட்சகருமாயிருக்கின்ற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த உன்னதமான பத்திரிக்கையின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிகவும் சந்தோஷமடைகிறேன். நான் கொடுத்து இருக்கும்.. நீ யார்? என்கிற தலைப்பைப் பார்த்தவுடன் உங்கள் முகங்கள் வேறுபடும் என்று நினைக்கிறேன்! ...நீர் யார்? என்று நான் உங்களை பார்த்து கேட்பதற்கு முன், யார் இந்த வார்த்தையை வேதாகமத்தில் பயன்படுத்தி இருக்கிறார் என்ற வேத வசனத்துடன் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

பிரியமானவர்களே! இந்த வார்த்தையை வேதத்தில் பிதாவாகிய தேவன் இஸ்ரவேல் மக்களைப் பார்த்துக் கேட்கிறார். உன்னை உண்டாக் கின கர்த்தரை மறக்கிறதற்கு நீ யார்? ஏசா. 51:12. நாம் இந்த வசனத்தை கூர்ந்து கவனிக்க வேண்டும். அன்பானவர்களே நீ என்பதற்கும் நீங்கள் என்பதற்கும் வித்தியாசம் உண்டு, நீ என்ற வார்த்தை ஒருவருக்கு மரியாதை கொடுக்காமல் பேச கூடிய ஒன்று, நீங்கள் என்ற வார்த்தை ஒருவருக்கு மரியாதை கொடுத்து பேசக்கூடிய ஒன்று. தேவன் இஸ்ரவேல் மக்களை பார்த்து உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கும் நீ யார் என்கின்ற வார்த்தையை ஏன் பயன் படுத்துகிறார்? இஸ்ர வேல் மக்களைப் பற்றி நமக்கு சொல்லவே தேவையில்லை அவர்கள் வாழ்ந்த காலத்தில் தேவனுக்கு முன்பாக நன்மை செய்ததை காட்டிலும், தீமை (பாவம்) செய்ததே அதிகம் உபா 7:7-10 இஸ்ரவேல் மக்களை தமக்கு சொந்த ஜனமாகவும் முற்பிதாக்களுக்கு இட்ட ஆணையை காக்க வேண்டும் என்பதினால் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனின் கையிலிருந்து மீட்டு வந்தார். இவர்கள் (1) மாம்ச (சரீர) பிரகாரமான காரியத் திலும் (2) ஆவிக்குரிய ரீதியிலும் பாவம் செய்து தேவனை மறந்தார்கள். எப்படி என்று வேத வசன ஆதாரத்துடன் பார்ப்போம் என்னோடு சேர்ந்து வாருங்கள்.

**I. மாம்சிக (சரீர) காரியத்தில் தேவனை மறந்தார்கள்**

இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதும் இல்லை, தூங்குவதும் இல்லை என்று சங் 121:4ல் கூறுகிறது. தேவன் இஸ்ரவேல் மக்களை எகிப்தின் அழிவின் பாதையில் இருந்து நித்திய பாதைக்கு அவர்களை கொண்டு வர சகல அற்புதத்தினாலும் வழி நடத்தி வந்தார். ஆனால் அவர்கள் அற்ப சரீர காரியத்திற்கு தன்னை உண்டாக்கின கர்த்தரை மறந்தார்கள், எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து இஸ்ரவேல் மக்களை மோசேயின் மூலம் வழி நடத்திக் கொண்டு வந்தார். உணவுக்காக (ஆகாரம்) நன்றி இல்லாத ஜனங்களாக மாறினார்கள். யாத் 15:24, 16:3, 17:3, எண் 11:5, இந்த வசன பகுதியை சற்று தயவுக் கூர்ந்து வாசித்துப் பாருங்கள். இவர்களின் முறுமுறுப்பு என்ன என்று தெரியும். செங்கடலை பிளந்து வெட்டாந்தரையிலே அதாவது "பைபாஸ் ரோட்டில் போவது போல" இவர்கள் வெட்டாந்தரையிலே நடந்துப்போனார்கள். தண்ணீர் இடது வலது புறமாக அவர்களுக்கு மதிலாக (பாதுகாப்பாக) நிற்கும்படி தேவன் செய்தார் இரவில் அக்கினி ஸ்தம்பத்திலும் பகலில் மேகஸ் தம்பத்திலும் தேவன் அவர்களை கண்மணியை போல வழி நடத்தினார், இப்படிப்பட்ட அதிசயத்துடன் வழி நடத்தின தேவன் நமக்கு ஆகாரம் கொடுப்பார் என்று இஸ்ரவேல் மக்கள் நினைக்காமல், ஆகாரத்திற்காக முறுமுறுத்து தேவனை மறந்தார்கள். ஆனாலும் தேவன் இஸ்ரவேல் மக்களை கைவிட்டுவிட்டாரா? இல்லை. தேவன் இரக்கமும் மன உருக்க மானவர் அதே சமயம் எரிச்சல் உள்ள தேவன் என்றும் வேதம் கூறுகிறது. நம்முடைய நினைவில் இருக்க வேண்டியது இஸ்ரவேல் மக்கள் பாவம் செய்யும் போது அதற்குரிய தண்டனையும் அவர்கள் பெற்று இருக்கிறார்கள்.

பிரியமானவர்களே, நாம் எப்படி இருக்கிறோம்? இஸ்ரவேல் மக்களை போல நாமும் மாம்ச (சரீர) காரியத்திற்காக நம்மை உண்டாக்கின தேவனை மறக்கிறவர்களாக இருக்கிறோமா? கலா. 5:24 கிறிஸ்துவினுடையவர்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளை சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் என்று கூறுகிறது.

1 தீமோ 4:8 சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது அற்பமான இந்த சரீர முயற்சிக்காக நம்மை உண்டாக்கின தேவனை நாம் மறக்கலாமா? அப்படி மறக்கிறவர்களாக நாம் இருந்தால் நாமும் இஸ்ரவேல் மக்களை போல தான் இன்றும் இருந்து கொண்டு இருக்கிறோம். நாம் சரீரப்பிரகாரமான காரியங்களுக்காக அவர்களை போல தேவனுக்கு முன்பாக முறுமுறுத்துக் கொண்டு இருப்பதை விட்டு விட வேண்டும். ஏனென்றால் ரோமர் 8:6ல் மாம்ச சிந்தை மரணம் என்று கூறுகிறது. பிரியமானவர்களே, உலக ஆசைக்காக நம்மை உருவாக்கிய

தேவனை மறக்கலாமா? கூடாது அப்படி மறந்தால் நீ யார் என்ற தேவனுடைய வார்த்தைக்கு நாம் ஆளாகிவிடுவோம்.

**II. ஆவிக்குரிய ரீதியிலும் தேவனை மறந்தார்கள்**

எரேமியா தீர்க்கன் கூறுகையில் ஒரு பெண் ஆபரணத்தையும் (நகை) ஒரு மணவாட்டி (திருமணப்பெண்) தன் ஆடைகளை மறப்பாளோ? எரே 2:32, பெண்கள் இவ்விரண்டு காரியத்தை எந்த சமயத்திலும் மறக்கவே மாட்டார்கள் உண்மைதானே! என் ஜனங்களோ எண்ணி முடியாத நாட்களாய் என்னை மறந்து விட்டார்கள் என்று கூறுகிறார். கொஞ்ச நாட்களிலே தேவனை மறக்கும்படியான சிந்தனை யை கொண்டு வரும் அளவிற்கு அவர்கள் பாவம் இருந்து இருக்கிறது. ஆனாலும் தேவன் இஸ்ரவேல் மக்களை எவ்வளவு நேசித்து இருந்தால் "என் ஜனங்களோ" என்று கூறுகிறார். நித்தியமுள்ளவரை தேவனாக பெற்று இருந்தும் அவரை மறந்து நித்தியத்தை இழந்து போனார்கள். எரே 3:21 தங்கள் வழியை மாறுபாடாக்கி ஒன்றான மெய் தேவனை மறந்து பொய்யான விக்கிரகங்களை வணங்கும்படி தங்களை அழிவுக்கு ஒப்புக் கொடுத்து ஆவிக்குரிய ரீதியில் தேவனை மறந்துப் போனார்கள். எரே 5:7 இந்த வசனத்தில் உள்ள பாவங்களை படித்து பாருங்கள் இப்படிப் பட்ட பாவம் செய்து தேவனை மறந்துப் போனார்கள். எரே 13:25 அவர்கள் தேவனை மறப்பதற்கு ஒரு முக்கியமான சான்றும் கொடுக்கப்படு கிறது. அவர்கள் நம்பிக்கையான தேவனை மறந்து பொய்யான (சாத்தானை) நம்பினார்கள். யோவான் 8:44 பொய்க்கு பிதா சாத்தான் என்று இயேசு கிறிஸ்துவே கூறுகிறார். இஸ்ரவேல் மக்கள் மாய்மாலத்தை நம்புகிறவர்களாக இருந்து இருக்கிறார்கள். இந்த இஸ்ரவேல் மக்களை நாம் புத்தியில்லாத இஸ்ரவேலரே என்று கூட கூறலாம், ஏன் என்றால் எரே 18:5 என் ஜனங்களோ என்னை மறந்து மாயையான விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டுகிறார்கள் ஒன்றுமே இல்லாத கல், மரம் இவைகளால் ஆன சிலைகளுக்கு முன்பாக இவர்கள் வணங்குவதும், தூபங்காட்டுவதுமாக இருந்து இருக்கிறார் கள் ஏசா 44:13-20 இந்த வசனப்பகுதியைத் தியானித்து பார்க்கவும், இப்படி ஆவிக்குரிய ரீதியில் பாவம் செய்து இருக்கிறார்கள். நாம் ஆவிக்குரிய ரீதியில் எப்படி இருக்கிறோம்?

பிரியமானவர்களே! இந்த இஸ்ரவேல் மக்களை போல நாம் இருக்க கூடாது. **ஏசா. 65:11,12** கர்த்தரின் பர்வதத்தை (ஆலயம்) மறந்து பாவத்தில் வாழ்ந்து இருக்கிறார்கள். சங். 50:22 தேவனை மறக்கிறவர்களே இதை சிந்தித்துக் கொள்ளுங்கள், கர்த்தரின் ஆலயத்தை மறக்கிறவர்களை பீறிப்போடுவேன் என்று தேவன்

கூறுகிறார். ஓசியா 4:6 வேதத்தை மறந்து இருக்கிறார்கள், வேதத்தை மறப்பதும் தேவனை மறப்பதும் ஒன்று. சங். 9:17 தேவனை மறக்கிறவர்கள் நரகத்தில் தள்ளப்படுவார்கள். நாம் எப்படி இருக்கிறோம்? தேவனை மறக்கிற வர்களாக இருந்தால் "நீ யார்" என்ற தேவனுடைய வார்த்தைக்கு நாம் ஆளாகி விடுவோம்.

ஆகையால், இந்த கட்டுரையை வாசித்துக் கொண்டு இருக்கும் என் அன்புக்கு சொந்தமானவர்களே! இஸ்ரவேல் மக்களை போல பொய்யான காரியங்களுக்காக தேவனுடைய சபையையும், வேதத்தை யும் மறக்கும் போது நம்மை உண்டாக்கின தேவனை மறக்கிறவர்களாய் நாம் காணப்படுவோம். இப்படிப்பட்ட காரியத்தை செய்தால் தான் தேவனை மறப்பது என்று அர்த்தம் இல்லை. நம்முடைய வாயின் வார்த்தை, பார்வை, சிந்தனை, செயல்பாடுகள், இவைகளினால் நாம் பாவம் செய்தால் கூட தேவனை மறக்கிறவர் களாக காணப்படுவோம். ஏசா 49:15 தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இறங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? கண்டிப்பாக மறக்கவே மாட்டாள். ஒருவேளை மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை என் தேவன் கூறுகிறார். இப்படிப்பட்ட தேவனை நாம் மாம்சீக (சரீர) காரியத்திலும் ஆவிக்குரிய ரீதியிலும் அவரோடு சார்ந்து வாழ்வோம். அவரை மறக்கிறதற்கும் நாம் யார்? ஆமென்.

**P.M. சம்மா**
திருப்பத்தூர்.

## பொய்

பிசாசு பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாயிருக்கிற படியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான் (யோவா 8:44)

...பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (வெளி 21:8)

கர்த்தர் வெறுக்கும் ஏழு காரியங்களில் பொய்யும் ஒன்று (நீதி 6:16:19)

சிறுவர் பகுதி

# செவி கொடுக்கும் தேவன்





கிறிஸ்துவுக்குள் என் அன்புக்குரிய தம்பி, தங்கைகளே, உங்கள் யாவருக்கும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நாம் ஒவ்வொருவரும் அரையாண்டு தேர்வுக்காக நம்மை இந்நாட்களில் ஆயத்தமாக்கிக் கொண்டிருப்போம் என நம்புகிறேன். ஆகவே உங்களுக்கு தன்னம்பிக்கை அளிக்கும் பொருட்டு இக்கட்டுரையை எழுதியிருக்கிறேன். என்னோடு சேர்ந்து, தயவுசெய்து கவனமாகப் படியுங்கள்.

மெத்தையில் விழுந்த ஏஞ்சலின் ஒரு பெருமூச்சு விட்டாள். அறைக்குள் வந்த அவள் அம்மா, பள்ளியில் இன்று உனது நாள் நன்றாக அமையவில்லையா என்ற அரவணைப்போடு கேட்டாள். நன்றாக அமையவில்லை என்று சொல்லாதீர்கள். மிகவும் மோசமாக இருந்தது, எனக்கு அங்கு போகவே எனக்கு பிடிக்கவில்லை என்று ஏஞ்சலின் வெறுப்புடன் கூறினாள். அதைக் கேட்ட அம்மா, பள்ளியில் அப்படி என்னதான் நடந்தது? என்று சொல்லேன் என்றாள்.

சரி, அப்படி ஒன்றும் பெரிதாக நடந்துவிடவில்லை என்பது ஏஞ்சலின் விளக்கம். என் புதுப் பள்ளியில் ஒருவரையும் எனக்குத் தெரியவில்லை. அது தான் பிரச்சினை. நான் சேர்ந்துள்ள பள்ளியில் சென்ற வருடமே அநேகர் படித்திருப்பதால், ஒருவரையொருவர் நன்றாக அறிந்திருக்கிறார்கள். ஆனால் எனக்கோ

புதுநண்பர்களை கண்டுபிடிப்பது மிகவும் கடினமாயுள்ளது.

நீ என்ன சொல்ல வருகிறாய் என்று நன்றாக புரிகிறது. நானும் உன் தந்தையும் இதைக் குறித்து பேசினோம். போகப் போக உனக்கு இது பழகிவிடும் என்றாள்.

என்ன செய்வதென்றே எனக்கு புரியவில்லை என்று கூறினாள் ஏஞ்சலின். கவலைப் படதே ஏஞ்சலின், நம் ஒவ்வொரு பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கும் படியாகவே பரலோகத்தின் தேவன் வேதாகமத்தை நமக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார். நேற்றிரவு நான் ஏசாயா வின் தீர்க்கதரிசன புத்தகத்தை படித்தேன் அதில் யூதர்கள் அடிமைகளாக, அவர்களுக்குப் பழக்கமில்லாத பாபிலோன் தேசத்திற்கு போனார்கள். அங்கு அவர்கள் தனிமையில் வாடுவதாக எண்ணினார்கள். தேவன் அவர்களுக்கு செவி கொடுக்கவில்லை என்றும் நினைத்தார்கள்.

இப்போது தனிமை என்ன என்பதை நானும் உணர்கிறேன் என்று ஏஞ்சலின் கூறினாள். ஆனால் அம்மாவோ, ஏசாயா தீர்க்கன் சொல்வதை தொடர்ந்து சொல்லத் தொடங்கினாள். தேவன் எப்படிப்பட்டவர் என்று ஏசாயா யூதர்களுக்கு விளக்கு கிறார். நமது தேவன் விக்கிரகங்களைப் போல செவி கொடாத தேவன் அல்ல. அவர் நமது ஜெபத்திற்கு பலன் கொடுப்பதில் சோர்ந்து போகிறவரும் அல்ல. (ஏசா 40:27,31).

என் அன்பு மகள் ஏஞ்சலினே, தேவனிடத்திலே உன் பிரச்சினைகளைச் சொல்லி ஜெபி என்று கூறினார்கள். அத்தோடு, அதை நீ செய்வாயானால் உன் ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுப்பார் என்றும் கூறினாள்.

ஏஞ்சலினின் முதுகை அன்போடு தட்டிக் கொடுத்து விட்டு அடுப்படிக்குள் சென்றாள். அம்மா சென்ற பின் ஏஞ்சலின் முழங்காலிட்டு தேவனை நோக்கி, தேவனே, பள்ளியில் நான் தனிமையில் தவிக்கிறேனே! எனக்கு இரங்கும்! என் பிரச்சினை யை நீக்கும் என்று இயேசுவின் மூலம் கெஞ்சி ஜெபித்தாள். அவள் ஜெபித்த பின்பு மிகவும் நன்றாக இருப்பதாக உணர்ந்தாள். புன்னகை அவள் முகத்தில் மலர்ந்தது. தேவன் அவள் ஜெபத்திற்கு செவி கொடுத்ததாகவே எண்ணினாள்.

நாமும் நம்முடைய பிரச்சினைகளை தேவனுக்கு தெரியப் படுத்துவோம். தேவன் நமது ஜெபத்திற்கு நிச்சயம் செவி கொடுப்பார். பரத்திலிருந்து சிறு பிள்ளைகளாகிய நமக்கு ஞானம் தருவார். அப்பொழுது நம்முடைய தேர்வை நாம் பயமில்லாமல் சந்திக்க முடியும். வெற்றியும் கிடைக்கும். எதிர்காலம் ஆசீர்வாதமாக அமையும்.

**R.A.R. நாயகம்**

# இவர்கள் மரித்தார்கள் ஆனால் இன்னும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்

திருமறை ஆசான் வாசகர்களாகிய உங்கள் யாவருக்கும் நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் அன்பான நாமத்திலே வாழ்த்துகிறோம். சுகமாயிருப்பீர்களாக.

நம் செய்திக்கான வசனப்பகுதி லூக்கா 16வது அதிகாரம் வசனங்கள் 19 முதல் 31 வரை. நாம் யாவருக்கும் இந்த வசனப் பகுதிகள் மிகவும் பரிச்ச யமான ஒன்றுதான். ஏன் நம்முடைய சிறுபிள்ளைகளுக்கு கூட லாசரு ஆபிரகாமின் மடியில் இருந்ததும் ஐசுவரியவான் பாதாளத்தில் வேதனைப்பட்டான் என்பதும் தெரிந்த விஷயம் தான்.

ஆனால் இதில் அடங்கியுள்ள ஆழமான விஷயங்கள் தேவசித்தம் செய்தல், நித்திய ஜீவனுக்காக சேர்த்தல் பரலோக மகிழ்ச்சி ஆகிய ஆவிக்குரிய விஷயங்கள் என்ன என்பதை தியானிக்க இருக்கிறோம்.

**I. <u>வேதாகமத்திலே மரித்த பின்பும் பேசியவர்கள் : ஆபேல்</u>**

எபி 11:4ல் ஆபேல் மரித்தபின்பும் அவன் இன்னும் பேசுவதாக வேதாகமம் கூறுகிறது. **மோசே** உபாகமம் 34:5-7, 120 வயதில் மரித்தார். **எலியா** 2ராஜா 2:10-12 மரணத்தை காணாமல் பரலோகத் திற்கு ஏறிப்போனார். இந்த இருவரும் மத்தேயு 17வது அதிகாரம் 1-5 வசனங்களில் ஆண்டவரோடு பேசினார்கள் என்று பார்க்கிறோம். அவர்கள் மறுரூப மலையிலே என்ன பேசினார்கள் என்பதை லூக்கா ஆசிரியர் மட்டுமே தெளிவாக கூறுகிறார். லூக்கா 9:30-31 அவர்கள் (ஆண்டவரின்) அவர் எருசலேமிலே நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் தேவனாலே நற்சாட்சி பெற்றவர்கள்.

நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறும் ஆபிரகாம், லாசரு, ஐசுவரியமுள்ள மனிதன் இவர்கள் என்ன பேசப் போகிறார்கள் என்பதை கவனமாய்க் கேட்போம். யாக்கோபு 1:19 ...கேட்கிறதற்கு தீவிரமாக இருங்கள்.

**II. <u>ஆபிரகாம் பேசுகிறார்</u> :**

எனது பெயர் ஆபிரகாம் எனது தந்தை தேராகு நாங்கள் ஊர் என்கிற கல்தேயர் பட்டணத்தில் இருந்த போது, தேவன் என்னை

அழைத்தார் (எபி 11:8) அப்பொழுது, நான் போகும் இடம் இன்ன தென்று அறியாதவனாகப் போனேன். வெகுகாலமாக எனக்கும் என் மனைவி சாராய் (சாராள்)க்கும், பிள்ளையில்லாதிருந்த போது **(ஆதி 18:11)** நாங்கள் இருவருமே வயது முதிர்ந்தவர்கள்.

எப்படி தேவன் அழைத்த உடன் போகும் இடத்தை அறியாதவனாய் புறப்பட்டு வந்தேனோ! அதே போல எங்களுக்கு பிள்ளைகள் இல்லாதபோது **(ஆதி 12:2-3)** நான் உன்னை பெரிய ஜாதியாக்குவேன் என்றார். நான் அதையும் விசுவாசித்தேன் (எபிரெயர் 11:6).

**கலா 3:25** இன்று சத்தியத்தின்படி ஞானஸ்நானம் பெறும் எந்த ஒரு மனுஷனும் ஆபிரகாமின் சந்ததி என்று சொல்வதினால் தேவன் தமது வாக்கு தத்தத்தை நிறைவேற்றினார் (எண் 23:19).

**ஆதியாகமம் 22:1-17** ஒரு முறை தேவன் எனக்கு மிகப்பெரிய ஒரு சோதனையை வைத்தார். அதாவது, என் மகன் ஈசாக்கை நானே அழைத்துச் சென்று மோரியா மலையில் எனது கைகளாலே அவனை வெட்டி தகன பலியாக செலுத்த வேண்டும். (சங்கீதம் 119:60) (எரேமியா 15;16) மூன்று நாள் பிரயாணம் முடிந்து நாங்கள் மோரியா மலையின் மேல் ஏறிய போது கட்டைகளை சுமந்து வந்த என் மகன் என் தகப்பனே! பலிக்கு ஆடு எங்கே எனக் கேட்ட போது கூட, நான் மனந்தளரவில்லை தேவனுடைய வார்த்தையை நிறைவேற்றுவதை தான் என் உயிர் மூச்சாக எண்ணி செயல்பட்டேன்.

ஆதி 23:3 பூமியிலே எனக்கு திரளான ஆடுமாடுகள் (ஆதி 24:35) இருந்தது. செல்வ சீமானாய் வாழ்ந்த போதும் அதின் மீது என் மனதை வைக்காமல் (பிலி 3:20) 2 கொரி 5:1-2 பரலோகத்தில் நம்பிக்கை வைத்தேன். இதோ இப்பொழுது சந்தோஷ மாய் பேசுகிறேன். உங்கள் இருதயம் எங்கே இருக்கிறது.

பூமியிலே நீங்கள் (எனக்கு) ஆபிரகாமின் சந்ததி என்பது பெருமையான விஷயம் தான். மத்தேயு 3:9 மனந்திரும்பி கனி கொடுங்கள். நம்பிக்கையை பரலோகத்தில் வையுங்கள். இல்லை யென்றால் கல்லுகளால் தேவன் ஆபிரகாமிற்கு பிள்ளைகளை உண்டாக்க முடியும்.

### III. லாசரு பேசுகிறார்:

நான் தான் லாசரு பேசுகிறேன். யோவான் 11ம் அதிகாரத்தில் ஆண்டவர் உயிர்தெழச் செய்த லாசரு நீங்கள் சுகமாய் இருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஆனால் நான்தான் பூமியில் வாழ்ந்த போது சுகமாய் இல்லை. எனக்கு வீடு எதுவுமில்லை, உறவுகள் என்னை வெறுத்து விட்டனர். ஒரு வேளை என் உடல்முழுவதும் பருக்கள்

நிறைந்து இருந்ததும் (லூக் 6:21) நாய்கள் என் சரீரத்தை நக்கிக் கொண்டிருந் ததும் காரணமாக இருக்கலாம். எனக்கு ஆகாரம் ஒரு ஐசுவரிய வானின் மேசையில் இருந்து விழும் துணிக்கைகள்தான் (எச்சில் இலை ஆகாரம்). ஆனால் நான் மரித்தபோது தேவதூதர்கள் என்னை எடுத்துச் சென்று ஆபிரகாமின் மடியில் விட்டனர். இப்பொழுது நான் சந்தோஷமாய் பேசுகிறேன்.

நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா? பூமியில் எனக்கு, உணவில்லை, உறவுகளில்லை, மதிப்பான வாழ்வில்லை. ஆனால் நான் தேவனுக்கு பிரியமாய் வாழ்ந்தேன். உங்களுக்கு எல்லாம் இருக்கிறது தானே! நீங்கள் என்னைப் போல் ஆபிரகாமின் மடிக்கு வர முடியுமா? நீங்களும் வர வேண்டும் என்பதே என் ஆவல் (கொலோ1:8) (2தீமே 3:16-17).

## IV. ஐசுவரியவான் பேசுகிறார்:

நான்தான் ஐசுவரியவான் பேசுகிறேன். இங்கே வேதனை தாங்க முடியவில்லை. ஆபிரகாமிடம் லாசரு மூலம் ஒரு சொட்டு தண்ணீர் கேட்டேன். அது கூட எனக்கு கிடைக்கவில்லை. பூமியில் வாழ்ந்த போது (எரே 17:5) மனிதனையும், (யோபு 27:8) பொருளையும் நம்பினேன். என் வாசலருகே கிடந்த தரித்திரனை பார்க்ககூட எனக்கு நேரமில்லை. அந்த அளவு பொருள் என் கண்களை மறைத்து விட்டது. இப்பொழுது ஒன்று புரிகிறது. (நீதி 11:4) (லூக் 16:9) (மத் 6:20) நான் பூமியிலே பொருள் சேர்த்த அளவு பரலோகத்தில் சேர்க்க மறந்து விட்டேன். நீங்களாவது இந்த நரக வேதனைக்கு தப்பித்துக் கொள்ளுங்கள்.

## V. தேவன் பேசுகிறார் :

நான்தான் மனிதர்களாகிய உங்களையும் நீங்கள் காண்கிற யாவற்றையும் உண்டாக்கினேன். மனிதர்கள் என்னை நம்பினால் (1 தீமோ 4:8) இம்மையிலே நன்மையும் மறுமையிலே நித்திய ஜீவன் கிடைக்கும் (1கொரி 15:9) இந்த பூமியில் மாத்திரம் நம்பிக்கை வைத்தால் ஆத்துமா நரகத்தில் வேதனைப்படும் (எசே 18:23) 1தீமோ 2:4 எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படுவதே எனது விருப்பம்.

(செப் 1:18) வெள்ளியும், பொன்னும் என் கோபத்திற்கு தப்புவிக்காது. (உபா 10:17) என்னிடம் பட்சபாதமும், பரிதானமும் இல்லை. நீங்கள் மீட்கப்படும் ஒரே வழி.

பிர 12:13 கட்டளைகளை கைக்கொள்வதுதான் தேவ கிருபையும், சமாதானமும் உங்களை ஆண்டு கொள்வதாக ஆமென்.

**S. பிச்சைமுத்து**, தூத்துக்குடி.

# வேதாகமத்தில் ஈராக் நாடு

பரிசுத்த வேதாகமத்தில் இஸ்ரவேல் தேசம் பற்றி மிகவும் அடிக்கடி குறிப்பிடப்பட்டிருப்பது தெரியும். ஆனால், இஸ்ரவேலுக்கு அடுத்ததாக எந்த நாடு பற்றி என்று உங்களுக்குத் தெரியுமா? அது, ஈராக் நாடு தான். இருப்பினும் ஈராக் நாடு என்று வேதாகமத்தில் நேரிடையாகப் பயன்படுத்தப் படவில்லை. மாறாக, பாபிலோன், சிநேயர் மற்றும் மெசப்பத்தோமியா என்ற பெயர்கள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

மெசப்பத்தோமியா என்ற வார்த்தைக்கான பொருள், "இரண்டு நதிகளுக்கு இடையே" அல்லது குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், "டைகிரிஸ், யூப்ரடீஸ் நதிகளுக்கிடையே" என்பது. ஈராக் என்ற பெயருக்கான பொருள், "ஆழமான வேர்கள் கொண்ட தேசம்" என்பது. உண்மையில், ஈராக் ஆழமான வேர்கள் கொண்ட நாடுதான். வேதாகமத்தில், இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாடு.

**அதற்கான காரணங்கள் இதோ :**

1. ஏதேன் தோட்டம் ஈராக்கில் தான் இருந்தது (ஆதி 2:10-14)
2. ஆதாமும், ஏவாளும் ஈராக்கில் தான் சிருஷ்டிக்கப்பட்டனர் (ஆதி 2:7,8)
3. எழுதப்பட்டுள்ளபடி, சாத்தான் பற்றி முதன் முதலாக சொல்லப்பட்டிருப்பது ஈராக்கில் தான் (ஆதி 3:1-6)
4. நிம்ரோத்தால் உண்டாக்கப்பட்ட பாபிலோனும் மற்றும் பாபேல் கோபுரமும் ஈராக்கைச் சேர்ந்தவைகளே (ஆதி 10:8,9; 11:1-4)
5. மொழிகள் தாறுமாறாக்கப்பட்டது ஈராக்கில் தான் நடந்தது (ஆதி 11:5,11)
6. ஈராக்கிலிருந்த ஒரு பட்டணத்தில் இருந்து தான் ஆபிரகாம் வந்தான் (ஆதி 11:31)
7. ஈசாக்கின் மனைவி ஈராக்கிலிருந்து வந்தவளே (ஆதி 24:3-12)
8. யாக்கோபு, ஈராக்கில் 20 ஆண்டுகள் கழித்தார் (ஆதி 27:42-45, 31:38)
9. முதலாவது உலக சாம்ராஜ்யம் ஈராக்கில் தான் இருந்தது (தானி 1:1,2; 2:36-38).
10. ஈராக்கிலிருந்த ஒரு பட்டணத்தில் தான், சரித்திரத்தில் மிகப்பெரிய உயிர் மீட்சி நடந்தது (யோனா 3)
11. எஸ்தர் நூலில் இடம் பெற்றுள்ள சம்பவம் ஈராக் நாட்டில் தான் நடந்துள்ளது.
12. ஈராக்கிலுள்ள ஒரு பட்டணத்திற்கு எதிராக தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது தான் நாகூம் நூல்.

EZSR

## வேதாகமத்தில் காணப்படும் 12 வகையான கொடுப்பவர்கள்

✤ விருப்பத்தோடு கொடுத்தவர் - ஆபிரகாம்

தன் ஏக சுதனை பலியாகக் கொடுத்தார் - ஆதி 22:1-19

✤ மிகவும் அதிகமாகவும், குறைவாகவும் கொடுத்தவர் - ஏழை விதவை

தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டாள் (மாற் 12:44)

✤ கஞ்சத்தனமாகக் கொடுத்தவர் - சவுல்

அமலேக்கியரிடமிருந்து கொள்ளையிட்டவைகளில் கொடுக்க முன்வந்தவர் (1சாமு 15:17-23)

✤ தியாகமாகக் கொடுப்பவர் - தாவீது

இலவசமாய் எடுத்துக் கொடுக்க மறுத்தவர் (2சாமு 24:24)

✤ வஞ்சித்துக் கொடுத்தவர்கள் - அனனியா, சப்பீராள்

மறைத்து வைத்துக்கொண்டு எல்லாவற்றையும் கொடுத்தது போல் பாசாங்கு காட்டினர் (அப். 5:1-11).

✤ உதாரத்துவமாய்க் கொடுத்தவர்கள் - மக்கெதோனியா நாட்டு கிறிஸ்தவர்கள் முதலாவது தங்களை கர்த்தருக்கென்று கொடுத்தவர்கள் (2கொரி 8:1-5, 11:8,9).

✤ உள்ளதைத் தந்தவர்கள் - பேதுரு, யோவான்

பொன்னும், வெள்ளியும் இல்லாவிட்டாலும் தங்களிடத்திலிருந்ததைத் தந்தவர்கள் (அப். 3:1-10)

✤ தானாய் முன் வந்து கொடுத்தவர் - சகேயு

தன் ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்க கேட்காமலே முன் வந்தான் (லூக் 19:1-19)

✤ பலனை விரும்பி கொடுத்தவர்கள் - மனுஷரால் காணப்பட விரும்புபவர்கள்

அப்படிப்பட்டவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்தது (மத் 6:2).

✤ கபடமில்லாமல் கொடுத்தவர் - நல்ல சமாரியன்

மற்றவர்கள் காண வேண்டுமென கொடுக்காதவன் (லூக் 10:25-37)

✤ வாசனையாகக் கொடுத்தவர்கள் - பிலிப்பியர்கள்

இவர்கள் கொடுத்தது சுகந்த வாசனையாகவும், தேவனுக்கு உகந்த பலியுமாக இருந்தது (பிலி 4:17-18)

✤ மிகச் சிறந்ததைக் கொடுத்தவர் - தேவாதி தேவன்

அவரை விசுவாசிப்பவர்கள் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி தன் ஒரே பேறான குமாரனையே கொடுத்தவர் (யோ 3:16).

நம்முடைய கொடுத்தல் இதில் எந்த வகை?

# விசுவாசத்தின் அடிப்படைகள்

நாம் கடந்த மாதங்களில் சபை வரலாற்றை மறுபடியும் பார்த்துக் கொண்டிருந்தோம். நாம் சபை வரலாற்றின் காரியங்களை கிட்டத்தட்ட முடித்துவிட்டோம். கடந்த மாதத்தில் நாம் இந்த பாடத்தி லிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களை அடையாளங்கண்டு கொள்ளத் தொடங்கினோம். நாம் இந்த பாடங்களை தொடர்ந்து படித்துக் கொண்டிருக்கும் போது இந்த வாக்கியத்தை மனதில் கொள்ளுங்கள்! வரலாற்றிலிருந்து பாடங்களை கற்றுக்கொள்ள மறுப்பவர்கள் மற்றவர்கள் செய்த அதே தவறை திரும்பவும் செய்வார்கள்.

நாம் கற்றுக் கொண்ட முதல் பாடம் இதோ. ஜனங்கள் வேதா கமத்தை அதிகாரத்தின் ஒரே அளவுகோலாக வைத்துக் கொள்வதை விட்டுவிட்டு சென்ற போது மதப் பிழைகள் தோன்றின. அதற்கு பின்பு வேதாகமத்தை அதிகாரத்தின் ஒரே அளவுகோலாக கொண்டு ஜனங்கள் வேதாகமத்திற்கு திரும்பிய போது மதப்பிழைகள் களைந் தெறியப்பட்டன. தேவன் தம்முடைய வார்த்தையை மாத்திரம் அதிகாரத்தின் அளவுகோலாக பயன்படுத்தியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அநேக வேத வசனங்களை நாம் படித்தோம். நாம் இரண்டாம் பாடத்திற்கு செல்வதற்கு முன்பு ஒரு வசனத்தை மிக நெருக்கமாக பார்க்கப் போகிறோம்.

*கொலோசெயர் 3:17யை வாசியுங்கள்* நாம் இதற்கு முன்பே பார்த்திருக்கிறபடி இந்த வசனத்தில் தேவன் ஒரு நித்திய முக்கியத் துவம் வாய்ந்த விதியை வெளிப்படுத்தியிருக்கிறார். அது என்ன வென்றால் நாம் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்ய வேண்டும் என்று தேவன் கட்டளையிடுகிறார். இங்கே இயேசுவின் நாமத்தினாலே என்பது இயேசுவின் அதிகாரத் தினாலே நாம் எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்று பொருள் படும். நிச்சயமாகவே இயேசுவின் அதிகார மானது அவருடைய புதிய ஏற்பாட்டில் உள்ளது. நாம் இயேசுவின் புதிய ஏற்பாட்டில் எந்த நம்பிக்கைக்கோ, போதனைக்கோ அல்லது பழக்கத்திற்கோ சரியான அதிகாரத்தை கண்டுபிடிக்க முடியவில்லை யென்றால் நாம் தேவனுடைய வார்த்தையை நாம் படுகிறோம் எனவே அந்த பாவமான செய்கையை நிராகரிக்க வேண்டும்.

எனவே நீங்களும் நானும் விசுவாசிக்கின்ற, போதிக்கின்ற அப்பியாஸப் படுத்துகின்ற காரியங்கள் எல்லாம் புதிய ஏற்பாட்டில் தேவன் வெளிப்படுத்தியிருக்கின்றவைகளோடு பொருத்தமாக

உள்ளதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். தேவன் இந்த வசனத்தில் கட்டளையிட்டபடியிருக்கிறவைகளை கடந்த பல நூற்றாண்டுகளாக செய்திருந்தால் மத உலகில் இன்று காணப்படுகின்ற பிழைகள் எதுவும் இராது.

சபை வரலாறு என்கிற பாடத்திலே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய இரண்டாவது பாடம்.

இயேசு தம்முடைய சீஷர்களை ஓநாய் எப்படி ஆட்டுக்குட்டியை பட்சிக்குமோ அதேபோல பட்சிக்கக்கூடிய சத்துருக்கள் நிறைந்த இந்த கொடூரமான உலகத்திற்குள் அனுப்பினார். இதன் மூலம் இயேசு அவர்களுக்கும், நமக்கும் விலைமதிப்புள்ள எச்சரிப்புகளை விடுக்கிறார். முதலாவது, இயேசு அவர்களையும், நம்மையும் சர்ப்பத்தைப்போல வினாவுள்ளவர்களாயிருக்கும்படி எச்சரிக்கிறார். சர்ப்பங்கள் தங்களுடைய சத்துருக்களிடமிருந்து வரும் ஆபத்துகளை தவிர்ப்பதில் மிக ஜாக்கிரதையாக இருக்கும் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. எனவே, கர்த்தர் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களின் சத்துருக்கள் மூலமாக நமக்கு ஏற்படும் ஆவிக்குரிய ஆபத்துகளை தவிர்க்க நாம் ஜாக்கிரதை உடையவர்களாக இருக்க வேண்டும் என்று நமக்கு கூறுகிறார்.

இரண்டாவதாக மனுஷரைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று இயேசு சொல்கிறார். அதாவது, சில மனிதர்கள் போதிக்கின்ற அப்பியாஸப்படுத்துகின்ற மத சம்பந்தமான பிழைகளைக் குறித்து நம்மை நாமே காத்துக் கொள்ள வேண்டும். அந்த கள்ளப் போதகர்கள் நம்மை தவறான பாதைக்கு அழைத்துச் செல்ல நாம் அனுமதிக்கக் கூடாது. கேட்டுக்குப்போகிற விசாலமான பாதையில் நாம் நில்லாதபடி ஜீவனுக்குப் போகிற இடுக்கமான பாதையில் நாம் நிற்கத்தக்கதாக முழு முயற்சி எடுத்து அந்த கள்ளபோதகர்களை எதிர்க்க வேண்டும் (மத்தேயு 7:13-15).

நாம் ஏற்கனவே அப் 20:28-32 மற்றும் 1 தீமோத்தேயு 4:1-3 வசனங்களில் படித்தபடி பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள். விவாகம் பண்ணாதிருக்கவும் விசுவாசிகளும், சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அனுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்த பொய்யர் கட்டளையிடுவார்கள் என்று தேவன் எச்சரித்தார்.

கொலோசெயர் 2:8ல் தேவனிடத்திலிருந்து வரும் உறுதியான எச்சரிப்பை கவனியுங்கள். தேவன் ஏன் இப்படிப்பட்ட கடுமையான எச்சரிப்பை உங்களுக்கும், எனக்கும் விடுக்க வேண்டும். ஏனென்றால்

ஜனங்களால் நம்மை ஆவிக்குரிய பிரகாரமாக ஏமாற்றவும், கெடுக்கவும் முடியும்! அதை அவர்களால் எப்படிச் செய்ய முடியும்? ஒரு வழி லௌகிக ஞானத்தினால் என்று பார்க்கிறோம். இந்த வசன பகுதியில் தேவன் உலக ஞானத்தைப் பற்றிய சிநேகத்தை குறித்து பேசுகிறார், ஆவிக்குரிய ஞானம் அல்ல. தங்களை கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் இந்த உலக ஞானத்தை பயன்படுத்தி ஜனங்களை கவர முயற்சி செய்வார்கள். இது பாவமாகும் ஏனென்றால் ஜனங்களை கவர நாம் மனித ஞானத்தை பயன்படுத்தக் கூடாது தேவ ஞானத்தை தான் பயன்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக, ஜனங்கள் நம்மை மாயமான தந்திரத்தினால் ஏமாற்றுவார்கள். சிலர் பக்தி உடையவர்களாய் தோற்றம் அளித்து தங்களுடைய போதனைகளில், பிரசங்கங்களில் வஞ்சனையை பயன் படுத்துவார்கள். ஏமாற்றானது பிசாசின் கருவிகளுள் ஒன்றாக இருக்கிறது என்று ஏற்கனவே நாம் பார்த்தோம்.

மூன்றாவதாக, சிலர் மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தினாலும், உலக வழிபாடுகளினாலும் நம்மை ஏமாற்றுவார்கள், நம்மை கெடுத்துப் போடுவார்கள். ஜனங்கள் நமக்கு எப்படி மனிதர்களுடைய பாரம்பரியங்களை நமக்கு வழங்குகிறார்கள்? மனிதர்களால் உண்டாக்கப்பட்ட உபதேசங்கள் மூலமாகவும், குடும்ப பழக்க வழக்கங்கள் மற்றும் கலாச் சாரத்தினாலும் மனிதர்களுடைய பாரம்பரியங்கள் நமக்கு வழங்கப்படுகின்றன. ஆனால், இங்கே மிக முக்கியமான கருத்தை கவனியுங்கள் இது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும், உலக வழிபாடுகளையும் பற்றினதயேல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல எனவே இவைகள் கிறிஸ்துவுக்கும், அவருடைய உபதேசத்துக்கும் எதிரானவைகள். இப்படிப்பட்ட கள்ள உபதேசங்களுக்கு நாம் இணங்கினால் நாம் தவறான பாதையில் நடத்தப்படுவோம். எனவே தான் நாம் மனிதர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

**சபை வரலாறு என்கிற பாடத்திலே நாம் கற்றுக் கொள்ள வேண்டிய மூன்றாவது பாடம்.**

**பூர்வ பாதைகளை கேட்டு விசாரிக்க வேண்டும்.**

எரேமியா 6:16யை வாசியுங்கள் சபை வரலாறு பாடத்திற்கு இந்த வசனத்தை பொருத்திப் பார்க்கும்போது எவ்வளவு வல்லமை உள்ள தாயிருக்கிறது என்பதை சிந்தித்துப்பாருங்கள். இங்கே தேவன் இஸ்ரவேலை பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து நல்ல வழி எங்கே என்று பார்க்கும்படியாக கட்டளையிடுகிறார்? அந்த கட்டளை ஏன் அவசியமானது? இஸ்ரவேல் தேவனிடமிருந்தும், அவருடைய வார்த்தையிலிருந்தும் வழி தப்பி போய்விட்டது.

தேவன்தம்முடைய வழிக்கு திரும்பும்படி ஜனங்களை அழைக்கிறார், அவர்கள் அப்படிச் செய்தால் அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைப்பதாக தேவன் வாக்குத்தத்தம் செய்கிறார்.

இஸ்ரவேலின் பிடிவாதமான பதில் அதற்கு என்னவாயிருந்தது? நாங்கள் அதில் நடக்கமாட்டோம் என்றார்கள். எவ்வளவு பரிதாபகரமான நிலை! சர்வ வல்லவரிடமிருந்து வந்த இந்த கட்டளை நம்முடைய சபை வரலாறு பாடத்திற்கு எப்படி பொருத்தமாயிருக்கிறது! பல வருடங்களாக ஜனங்கள் தேவனுடைய வார்த்தையிலிருந்து வழி விலகிச் சென்று கொண்டிருக்கிறார்கள். இயேசு ஸ்தாபிக்காத சபைகளை எல்லாம் அவர்கள் ஸ்தாபித்திருக் கிறார்கள். ஆகவே, நாம் பூர்வப்பாதைகளை நாம் விசாரிக்க வேண்டும். அதாவது நாம் முதல் நூற்றாண்டில் இயேசு ஸ்தாபித்த அந்த ஒன்றான மெய் சபைக்கு திரும்ப வேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து குறித்திருக்கிற அந்த பாதையிலே நாம் நடக்கமாட்டோம் என்று சொல்லத்துணிய வேண்டாம். நாம் அப்படித் துணிந்தால் அதன் விளைவு நித்திய சோகமாயிருக்கும் ஏனென்றால் நாம் அவரிடமிருந்து நித்தியமாக பிரிந்துவிடுவோம். மாறாக, நாம் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால் நம்முடைய ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

சபை வரலாறு பாடத்திலே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நான்காவது பாடம்.

தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்தின் மீது நம்முடைய நேசத்தை வளர்த்துக் கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

சங்கீதம் 1:2ல் உண்மையிலேயே பாக்கியவானான ஒரு மனுஷனுடைய குணாதிசயங்களை கவனியுங்கள். முதலாவதாக, அந்த மனிதர் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருக்கிறான். அதாவது தேவனுடைய அருமையான வார்த்தைகளை வாசிப்பதும், படிப்பதும் இந்த மனிதனுக்கு தூய்மையான சந்தோஷத்தைக் கொடுக்கிறது. பிரியமானவர்களே, இது உங்களுடைய மனநிலையாய் இருக்க வேண்டும் என்பது என்னுடைய ஜெபமாயிருக்கிறது

அந்த பாக்கியவான் கர்த்தருடைய வேதத்தில் தனக்கு இருக்கிற பிரியத்தை எப்படிக் காட்டுகிறான்? அப்படிக்காட்டுவதன் ஒரு வழி இரவும், பகலும் கர்த்தருடைய வேதத்தில் தியானமாயிருப்பதாகும். எனவே, நீங்களும் நானும் உண்மையான சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டுமென்றால் தேவனுடைய வல்லமையுள்ள வார்த்தைகளை ஆழமாகவும், விவரமாகவும் சிந்திக்க வேண்டும். அப்படி நாம் செய்யும் போது, அது நாம் சிந்திக்கும் விதத்தை மாற்றும். அது நாம் தேவனைப் பிரியப்படுத்தும் ரீதியிலும், மகிமைப்படுத்தும் ரீதியிலும் வாழ நமக்கு உதவிச்செய்யும்.

சங்கீதம் 119:11யை நாம் வாசிக்கும்போது சங்கீதக்காரன் தேவனுடைய வாக்கை தன்னுடைய இருதயத்திலே வைத்து வைத்தார். எபிரெய மொழியில் இந்த வார்த்தை பொக்கிஷமாக சேர்த்து வைத்தல் என்று பொருள்படுகிறது. தெளிவாகவே இந்த சங்கீதக்காரன் தேவனுடைய வார்த்தையை விலைறேப்பெற்ற பொக்கிஷமாக பார்த்தி ருக்கிறார். நிச்சயமாகவே, தேவனுடைய வார்த்தைக்கான தன்னுடைய அன்பை அபிவிருத்தி செய்திருக்கிறார். அதன் விளைவாக தன்னுடைய இருதயத்திலே அதை பொக்கிஷமாக சேர்த்து வைத்திருக்கிறார். உங்களுக்கும் எனக்கும் சங்கீதக்காரன் எவ்வளவு பெரிய முன்மாதிரியாக இருக்கிறார் என்று பாருங்கள்!

இந்த வசனத்தில் சங்கீதக்காரன் சொன்ன வார்த்தையின்படி, தேவனுடைய வார்த்தையை தன்னுடைய இருதயத்திலே பொக்கிஷ மாக சேர்த்து வைத்ததின் காரணங்களுள் ஒன்று என்ன? ஆம் அது தேவனுக்கு விரோதமாக பாவஞ்செய்வதை குறைக்கும் தேவனுடைய வார்த்தைகளை நம்முடைய இருதயத்திலே நாம் சேர்த்து வைக்கும் போது, சோதனை வேளையிலும், நெருக்கடிகளை சந்திக்கும் போதும் அவைகளை நம்முடைய மனதுக்கு கொண்டு வரலாம். அது நம்மை பலப்படுத்தி பிசாசுக்கு விரோதமாகவும், பாவத்துக்கு விரோதமாகவும் நாம் போர் செய்ய உதவிச் செய்யும்.


கர்த்தர் நம்மை பாதுகாத்தால் அடுத்த மாதம் சத்தியமாகிய தேவனுடைய வார்த்தையின்மீது நம்முடைய நேசத்தை வளர்த்துக் கொள்வது சம்பந்தமான அநேக வேத வசனங்களை நாம் படிக்கலாம். அதற்குப்பிறகு சபை வரலாறு பாடத்திலே மற்றுமொரு பாடத்தை படிக்கப்போகிறோம். அதுவரை, நீங்கள் முதலாவது தேவனையும், அவருடைய நீதியையும் உங்களுடைய ஜீவியங்களின் தேடும் போது உங்களை காத்துக்கொள்வாராக!

***Charlie Dipalma*** ***Benny Martin***

## வேறு இல்லை

- ❊ வேதாகமத்தை தவிர வேறு புத்தகம் இல்லை
- ❊ கிறிஸ்துவைத் தவிர வேறு ஆகமம் இல்லை
- ❊ கிறிஸ்துவின் வழியைத் தவிர வேறு வழி இல்லை
- ❊ கிறிஸ்துவின் சபையைத் தவிர வேறு சபை இல்லை

"ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்" (1பேது 4:11)



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Regd. News Paper RNI No. 47661/87
Postal Regn. No. Erode/26/2006-2008
Posted at Erode HPO on 20/21 of Every Month

# வேதாகம கருத்தரங்கில் கருத்தாளர்கள்




வேதாகம கருத்தரங்கில் பங்கு பெற்றோரில் மற்றொரு பகுதி




Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.